விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 10 ஞாயிற்றுக்கிழமை (26.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 312




## ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் நேற்று புதுடில்லிக்குப் பயணம்



### இந்தியத் தலைவர்களுடன் இன்று பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் பசில் ராஜபக்ஷ நேற்று மாலை புதுடில்லிக்கு புறப்பட்டுச் சென்றார். புதுடில்லிக்குச் சென்றுள்ள அவர் இந்தியாவில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப்பேசவுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு தலையிடவேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் மத்திய அரசும்இது தொடர்பான செயற்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ளது.

பிரதமர், வெளியுறவு அமைச்சர் உள்ளிட்டோர் இது தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண (14ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ ஊடுருவும் அணி மீது புலிகள் தாக்குதல்

(கிளிநொச்சி)

படையினரின் ஆழஊடுருவும் தாக்குதல் நடவடிக்கையை முறியடித்துள்ளதுடன் அவர்களின் இரு உடலங்களையும் கைப்பற்றியுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வன்னியில் படையினர் நேற்று முன்தினம் ஆழஊடுருவும் தாக்குதலை மேற்கொண்ட நிலையில் அதனை விடுதலைப் புலிகள் முறியடித்துள்ளனர்.

இம்முறியடிப்பில் இரு படையினர் கொல்லப்பட்டதுடன் அவர்களின் உடலங்களையும் விடுதலைப் (14ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்கா-இந்தியா முன்வர வேண்டும்

### அமெ.தூதுவர் வலியுறுத்தல்

(சென்னை)


இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து முன்வர வேண்டுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மருத்துவமனை மீது படையினர் எறிகணைத் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொது மருத்துவமனையின் மீது படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பொது மருத்துவமனை மீது நேற்று சனிக்கிழமை படையினர் வீசிய எறிகணைகள் மருத்துவ மனையின் வாசல் மற்றும் மதில் சுவர்களின் மீது வீழ்ந்து வெடித்துள்ளன. இதனால் (14ஆம் பக்கம் பார்க்க)



## நேரடித் தலையீட்டை மேற்கொண்டு தீர்வினை ஏற்படுத்த இந்தியா முயலும்


### இரா.சம்பந்தன் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு தீர்த்து வைக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டுக்கு இந்தியா வந்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தியாவின் இம்மாற்றத்தினை சீராக அணுகி பலனைப்பெறவேண்டியது ஈழத்தமிழர்களாகிய எங்கள் அனைவரினதும் பொறுப்பு எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் (14ஆம் பக்கம் பார்க்க)



## காத்தான்குடியில் கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

காத்தான்குடி ஹுசைனியா பள்ளிவாசல் முன்பாக நேற்று இரவு 8.15 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சு சம்பவத்தில் 5 பேர் காயமடைந்தனர்.

இவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2 முஸ்லிம் குழுக்களுக்கிடையில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் மதப்பிரிவு பிரச்சினையின் காரணமாகவே இந்த சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## கிளிநொச்சி முன்னரங்கில் மோதல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி யுத்தகளத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் தொடர்ச்சியான மோதல்கள் நடைபெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் 57-வது படைப்பிரிவு முன்னகர்வுகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடு, மணியங்குளம் மற்றும் பல்லவராயன்கட்டு ஆகிய பகுதிகளில் 57-வது படைப்பிரிவு விடுதலைப் புலிகளுடன் பல்வேறு மோதல்களில் ஈடுபட்டதாகவும் கிளிநொச்சி தெற்கு பனிக்கன்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இருதரப்புக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

572-வது பிரிகேடியர் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் அக்கராயன்குளம் வடக்குப் பகுதியில் (14ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்வாதாரப் பொருட்களை வன்னிக்கு அனுப்ப வேண்டும்

### ஐ.நா.செயலர் வலியுறுத்தல்


(கொழும்பு)

வன்னியிலுள்ள பொதுமக்களுக்கான உணவு நிவாரணங்களுக்கு மேலதிகமாக, உணவுகளைத் தவிர்ந்த ஏனைய நிவாரணங்களையும் அனுப்பி வைக்குமாறு ஐக்கிய நாடுகள் பொதுச்செயலர் பான் கீமூன் இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனையடுத்து இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள இலங்கை அரசாங்கத்தரப்பு தயாராகி வருகின்றது.

வன்னிக்கு உணவு லொறிகள் அனுப்பப்படுகின்ற போதும் அங்கு மக்களுக்குத் தேவையான கூடாரங்கள் மற்றும் ஏனைய வசதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. எனவே அவற்றையும் அனுப்பி வைக்கவேண்டும் (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



யாழ்.மாவட்ட பாடசாலைகள், பெருவிளையாட்டுக்கள், தடகளப் போட்டிகளுக்கான பரிசுகள் வழங்கும் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மங்கல விளக்கேற்றுவதையும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசை யாழ்.அரச அதிபர் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- அமிர்தன்)

# தாக்குதல்களை நிறுத்தக் கோரி தென்னாபிரிக்காவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனப்படுகொலையைக் கண்டித்துத் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வில் நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றனர்.

பிரிட்டோரியா நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பணிப்பாளர் பணிமனைக்கு முன்பாக அங்கு வாழும் தமிழர்கள் நேற்று முன்தினம் இக் கண்டன கவனயீர்ப்பு நிகழ்வினை நடத்தினர்.

இந் நிகழ்வில் பல அமைப்புகள் சார்பாக அவற்றின் பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் பங்கேற்றனர். நிகழ்வின் இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் பிராந்திய அதிகாரி டேவிற் ஜோன்சனிடம் மனு கையளிக்கப்பட்டது.

இரண்டாவது மனுவினை தென்னாபிரிக்க அரசாங்கத்தின் சார்பாக வெளிவிவகாரத்துறையின் பிரதி இயக்குநர் சூஸ் இம்ரில்வாவும் வெளிவிவகாரத் துறையின் தென்கிழக்காசியப் பிராந்தியத்தின் இணை இயக்குநர் காரி சிமித்தும் பெற்றுக் கொண்டனர்.

அங்கு கையளிக்கப்பட்ட மனுவில் ஈழத் தமிழர்களின் தாயகத்தில் ருவாண்டா போன்ற நிலைமையை உருவாகாமல் தடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உடனடியான மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்க அனுசரணை வழங்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள கண்மூடித்தனமான இனப்படுகொலையை நிறுத்தி விட்டுப் பேச்சு வார்த்தை மேசைக்குத் திரும்பவேண்டும்.

மனித நேயப் பணியாளர்கள் உடனடியாகப் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுமதிக்கப்பட்டு தங்குமிட வசதி, உணவு வசதியில்லாமல் அல்லலுறும் மக்களுக்கு உதவி மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்பன மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ச-5)


## தொலைந்து விட்டது

தர்மேந்திரா என்பவரின் Tax, Insurance புத்தகம் ஆகியன யாழ்ப்பாணத்துக்கும் கோப்பாய்க்குமிடையில் தொலைந்து விட்டது.

யாராவது கண்டெடுத்தால் தயவு செய்து வலம்புரிக் காரியாலயத்திலோ அன்றி தர்மேந்திரா, பிள்ளையார் கோவிலடி கோப்பாய் எனும் விலாசத்திலோ சமர்ப்பிக்கவும்.

நன்றி

உரும்பிராய் சைவத் தமிழ் வித். அதிபர்

(C-1719) மு.விக்னேஸ்வரன்


# சி.டி.எம்.ஏ. இணைப்புக்களில் 5 ஆயிரத்து 200 மீள வழங்கப்பட்டன

## ரெலிக்கொம் வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த சுமார் 7 ஆயிரம் சி.டி.எம்.ஏ. இணைப்புக்களில் 5 ஆயிரத்து 200 இணைப்புக்கள் மீள வழங்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா ரெலிக்கொம்மின் யாழ்.அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

இதுவரை 5 ஆயிரத்து 400 வாடிக்கையாளர்களே பொலிஸ் அனுமதியைப் பெற்று ரெலிக்கொம்மில் சமர்ப்பித்துள்ளனர்.

அவற்றிலிருந்தே 5 ஆயிரத்து200 இணைப்புக்கள் மீள வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.சிறிலங்கா ரெலிக்கொம்மின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

மேலும் 500 ற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இதுவரை தமது பொலிஸ் அனுமதியைப் பெற்று சமர்ப்பிக்கவில்லை எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன் புதிதாக சி.டி.எம்.ஏ. இணைப்புக்களை வழங்குவதனைத் தொடர்ந்தும் இடைநிறுத்தி வைத்துள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச-5)



தீபாவளி தினத்தை முன்னிட்டு யாழ்.நகர அங்காடிக் கடைகளில் புடைவைக் கொள்வனவில் ஈடுபடும் மக்களைப் படத்தில் காணலாம்.

# காவலரண் மீது புலிகள் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கோப்பாவெளிப் பகுதியிலுள்ள சிறப்பு அதிரடிப் படையினரின் காவலரண் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

மட்டக்களப்பிலுள்ள ஏ-5 பிரதான வீதியிலுள்ள கோப்பாவெளிப் பிரதேசத்தில் அமைந்திருந்த சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரின் காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு 7.10 மணியளவில் விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணி தாக்குதல் நடத்தியுள்ளது.

இக் காவலரணில் இருந்த சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர் என்று விடுதலைப்புலிகள் மேலும் தெரிவித்தனர். (ச-5)

# மக்கள் வங்கியின் தீபாவளி சேவை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி தீபாவளித் தினத்தன்று காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை வைப்புக்களை ஏற்பதற்காகத் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3,5)


1வது முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்

ANNAI NAGAA FOOD CITY

Annai Nagaa Food City

தீபாவளித் திருநாளை முன்னிட்டு அதிரடி தள்ளுபடி விலையில்



- சுத்தமாக பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள்.
- பல வகையான குளிர்பான வகைகள், பிஸ்கட், சொக்கிலேட் வகைகள்,
- இறக்குமதி செய்யப்பட்ட பழவகைகள், பழரசங்கள், கேக் மற்றும் கேக் உள்ளீடுகள்,
- அழகுசாதனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்,
- வீட்டுப் பாவனைப் பொருட்கள், பிளாஸ்ரிக் வகை தளபாடங்கள் இன்னும் பலவகைப் பொருட்கள்,
- இலத்திரனியல், மின்னியல் பொருட்கள், கவரிங் ஆபரண வகைகள், குழந்தைகளின் றெடிமேட் ஆடைகள்,
- மகளிருக்கான றெடிமேட் ஆடைகள், குடை மற்றும் மழைக் கவசங்கள்.

ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

அன்னை நாகா பூட் சிற்றி

வாடிக்கையாளர்களின் நலன் கருதி காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை திறந்திருக்கும்

175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C-1713) T.P:- 021-222 5515 , 021-222 5223

## நூலக விழிப்புணர்வு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் நூலக விழிப்புணர்வு நிறுவகம் நடாத்தும் பொது அறிவு மற்றும் கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் சம்பந்தப்பட்ட கோட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பாடசாலை அதிபர்கள் இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு மு.சின்னராசா, இணைப்பாளர், நூலகம், யாழ்.பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நூலக விழிப்புணர்வு நிறுவனத் தலைவர் ஸ்ரீ.அருளானந்தம் கேட்டுக் கொள்கின்றார். தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இல.-021 222 2970. (ஓ)

## பரிசில் நாள் நிகழ்வுகள்

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரி அதிபர் வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், நிக்கொட் நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர்.சிவரூபன், அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

## கலைநிலா அரங்கு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் கலைநிலா அரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு 286, பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நடனங்கள், ஓர்கன் இசை என்பவற்றுடன் சிறப்பு நிகழ்வாக குருநகர் புனித யாகப்பர் கலைமன்றம் வழங்கும் "போர்க்களம்" தென்மோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளது. (6)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 26

ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு.

# மணிவாசகர் சபையினர் நடத்தும் போட்டிகளுக்கான விண்ணப்பம்கோரல்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்து சிதம்பர மணிவாசகர் சபையினர் இவ்வருடம் தொடக்கம் பல்வேறு போட்டிகளை நடாத்தவுள்ளதாக அதன் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகள் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், கடந்த இரு வருடங்களாக சமயபாடப் பரீட்சையினை மட்டுமே வருடா வருடம் நடாத்தி அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மூன்று மாணவர்கள் பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் இவ்வருடம் தொடக்கம் பாடசாலை ரீதியாக பிரிவு பிரிவாக பண்ணிசைப் போட்டிகள் திருவாசக மனனப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என்பன நடைபெறவுள்ளது.

போட்டிகள் தரம் 2 முதல் தரம் 13 வரையான மாணவர்களை அடுத்துவரும் இரு தரங்களை ஒரு பிரிவாகக் கொண்டு 6பிரிவுகளில் நடாத்தப்படும்.

ஒரு மாணவர் அதிகூடியதாக இரண்டு போட்டிகளில் மட்டுமே பங்குகொள்ள முடியும் என்பதுடன் இப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களிற்கு விழாவின்போது பரிசளித்து கௌரவிக்கப்படும்.

இப்போட்டிக்குரிய விண்ணப்பப்படிவத்தினை சுயமாகத் தயாரித்து எந்த வித கட்டணமுமின்றி எதிர்வரும் 31ஆம்திகதிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறும் இப் போட்டிகளிலும் முதல் சுற்று எதிர்வரும் நவம்பர் 10 ஆம்திகதி திங்கட்கிழமைமுதல் அவரவர் பாடசாலையில் நடைபெறும் என்றும் இறுதிப் போட்டிகள் 17ஆம்திகதி திங்கட்கிழமை மாலை 2மணிக்கு யா/கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-246)



அண்மையில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில், இலங்கை வங்கி மானிப்பாய் மேற்தரக் கிளை நடாத்திய வங்கியியல் வழிகாட்டல் கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களையும், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் வங்கி ஊழியர்களையும் படத்தில் காணலாம்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சமூக அணி திரட்டல் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 1[illegible] ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி இளங் கலைஞர் மன்றத்தில் SOND நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாட்ட அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக UNDP யாழ்.அலவலகத் தலைவர் கே.வி. நிஷாந்தன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு நடாத்தும் சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2மணிக்கு அம்பன் அ.மி.த.க.பாடசாலையில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.சிறீஸ்கந்த குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு நிபுணர் மகிநோடா, மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி த.தபேந்திரராசா, அம்பன் அ.மி.த.க.பாடசாலை அதிபர் பொ.சிவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் கலைநிகழ்ச்சிகள், முதியோர் கௌரவிப்பு, பரிசில் வழங்கல், சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணம் வழங்கல் ஆகியன இடம்பெறும். (ஓ-2)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக அச்சு வேலி மத்திய கல்லூரி அதிபர் வே.பால சுப்பிரமணியமும், செயலாளராக ஊரெழு கணேச வித்தியாலய அதிபர் சி.திரிகரனும், பொருளாளராக கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் க.வை.இராசசேகரமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஓ)

## வாரம் ஒரு தகவல்

# அடிவாங்கும் ஆடவர்

"இன்ஸ்பெக்டர் ஐயா.. என்னைக் கொஞ்சம் காப்பாற்றுங்கள்...!"

"என்னப்பா என்ன விஷயம்... பயப்படாமல் சொல்!"

"என் சம்சாரம் என்னை அடிக்க வர்றா...!"

"இது ஒரு பெரிய புகார் என்று சொல்ல வந்துவிட்டாயாக்கும்.. தென் அமெரிக்காவில் என்ன நிலைமை தெரியுமா? அங்கேயெல்லாம் மனைவியிடம் உதைவாங்குவோர் எண்ணிக்கை வரவர அதிகமாகிக் கொண்டே வருகிறதாம்!"

"என்ன.... சொல்றீங்க?"

"கொலம்பியா பல்கலைக்கழகம் ஒன்றில் இதைப்பற்றி ஒரு புள்ளிவிபரம் சேகரித்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்த கணக்கெடுப்பின்படி மனைவியிடம் அடிவாங்குவோர் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது"

"இதற்கு என்ன காரணம் இருக்கும்?"

"அங்கு பெரும்பாலான குடும்பங்களில் மனைவிமார் தான் வேலைக்குப் போகிறார்கள். கணவர்கள் சும்மா இருக்கிறார்கள். அதனால் வீட்டுக்கார அம்மா சொல்வதைக் கேட்கவேண்டியதுதான்! இல்லையென்றால் அடி... உதை... தான்!"

"அப்படியானால் என் கதி...?"

"உடனே ஒரு வேலை தேடி உழைத்து முன்னுக்கு வா... அதற்குப் பின் தான் உன் பிரச்சினை தீரும்!"

"அப்படியே செய்கிறேன்! அதற்கு முன் ஒரு சின்ன உதவி...!"

"என்னப்பா செய்யவேண்டும்... சொல்!"

"நம் ஊரில் புருஷனை மிரட்டுவதற்காகவே பெண்களெல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள்.

அதில் என் வீட்டுக்காரியும் ஒரு உறுப்பினர். நீங்கதான் அந்த சங்கத் தலைவியிடம் சொல்லி மனைவிக்கு கொஞ்சம் அறிவுரை சொல்லும்படி சொல்லவேண்டும்"

"அது எப்படி முடியும்?"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"அந்தத் தலைவிதானே என் வீட்டுக்காரி!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

26.10.2008
(ஐப்பசி 10, ஞாயிற்றுக் கிழமை)
உத்தரம் பிற்பகல் 5.24 மணிவரை
திரயோதசி பின்னிரவு 3.40மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி, உடல்நலம். |
| இடபம் | வியாபார நன்மை, சிறுவியாதி, முயற்சி தாமதம், பணக் குறைவு. |
| மிதுனம் | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், சுபசெலவு, முயற்சி தாமதம். |
| கடகம் | கூட்டுமுயற்சி, இனிய நிகழ்வு, தனவருவாய், பிரயாண சுகம். |
| சிங்கம் | விவாதம், காரிய தாமதம், வீண் செலவு, கௌரவக்குறைவு. |
| கன்னி | வெகுமானம், கற்பனை மிகுதி, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | பிதாசிந்தை, பிரயாணம், முயற்சி தாமதம், சயன சுகக் குறைவு. |
| விருச்சிகம் | கீர்த்தி, காரிய நன்மை, குடும்ப சுகம், விருந்துபசாரம். |
| தனுசு | அதிகாரம், நண்பர்கள் உதவி, கடின உழைப்பு, தேகநலன். |
| மகரம் | வீண்பயம், புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |
| கும்பம் | பிரயாண பயம், காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, பணக் குறைவு. |
| மீனம் | செல்வாக்கு, காரிய அனுகூலம், திடீர் பயணம், அபூர்வசந்திப்பு. |

வளவன்

## கல்வித் தின விழா

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் அமைப்பின் அனுசரணையுடன் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் நடாத்தப்படும் கல்வித்தின விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளை மையப்படுத்தி குடும்பப் பாடசாலைகள் இணைந்து இந் நிகழ்வை முன்னெடுக்கவுள்ளன. எதிர்வரும் 15ஆம்திகதி யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் எதிர்வரும் 16 ஆம் திகதி கோப்பாய் மகாவித்தியாலயம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன் முன்னோடி நடவடிக்கையாக குடும்பப் பாடசாலைகள் ரீதியாக நிகழ்வு ஏற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ)

## தீபாவளி பண்டிகை நிகழ்வுகள்


சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடாத்தும் தீபாவளிப் பண்டிகை நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சைவச் சிறுவர் இல்ல ஆராதனை மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்க மாணவர் மன்றத் தலைவர் செல்வி சசிக்கா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந் தனன், சிறப்பு விருந்தினராக முத்துத் தம்பி மகாவித்தியாலய அதிபர் தி.சத்தியபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தலைவர் அ.தற்பரானந்தன் ஆசியுரையும், சைவ வி. வி.சங்க செயலாளர் க.வை. குணசேகரன், சைவ வி. வி. சங்க நிதிச் செயலர் சோ. பத்மநாதன் ஆகியோர் வாழ்த்துரை யையும் வழங்குவார்.

அத்துடன் இல்லச் சிறுவர் சிறுவர்கள் வழங்கும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-4)



# 'தல' யின் 'தல' தரிசனம்



பில்லா படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அஜித் நடித்து முடித்திருக்கும் படம் ஏகன். இது இவரது 48ஆவது படம். இந்தப் படத்தில் அவர் அதிரடி பொலிஸ்காரராக நடித்திருக்கிறார். அவருக்கு ஜோடியாக கல்லூரி பேராசிரியை வேடத்தில் நயன்தாரா நடித்தி ருக்கிறார். அஜித்தின் பில்லா படத்தில் கவர்ச்சித் தென்றலாக வலம் வந்தவர். இதில் கவர்ச்சிப் புயலாகவே மாறியிருக்கிறார்.

அஜித்தின் தம்பியாக நவ்தீப் நடித்திருக்கிறார். அறிந்தும் அறியா மலும் படத்தில் தனது அழுத்தமான நடிப்பால் அசத்திய நவ்தீப் இதில் முக்கியமான பாத்திரத்தில் வந்து படத்திற்கு வலு சேர்த்திருக்கிறார். இவர்களுடன் சுமன், சுஹாசினி, ஜெயராம், நாசர் ,ஸ்ரீமன்,ஹனிபா எனப் பலரும் நடித்திருக்கின்றனர்.

ஹிந்தியில் வெளியான "மெ ஹூன் நா" என்ற படத்தை கையில் எடுத்துக் கொண்டு அதில் தமிழ் ரசிகர் களுக்கு தகுந்த மாதிரி சுவாரஸ்யமான காட்சிகளை அதிகப்படுத்தி படமாக்கியிருக்கின்றனராம் ஏகன் குழு வினர்.இப் படத்திற்கு பிரபல எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் வசனம் எழுதியுள்ளார். ஏற்கனவே இவர் வசனம் எழுதிய சண்டைக்கோழி சக்கைப் போடு போட்டது. இப்போது இந்தப் படத்திற்கும் வசனம் எழுதியுள்ளார்.

ஆயிரம் பாடல்களுக்கு மேல் நடனம் அமைத்தவர் ராஜுசுந்தரம். இந்தியாவில் உள்ள எல்லா மொழிப் படங்களிலும் நடன இயக்குனராக பணிபுரிந்து நன்கு அனுபவம் பெற்றவர். சில படங்களில் காமெடிய னாகவும் நடித்திருக்கிறார். காமெடி சென்ஸும் அவருக்கு அதிகம் உண்டு. அதனால் அவர் முதன் முதலாக இயக்கும் படத்தை முழுக்க முழுக்க நகைச் சுவையாக எடுத்திருக்கிறார் .படத்தின் ஆரம்பம் முதல் முடிவு வரை சிரி ...சிரி.. என சிரித்துக் கொண்டே இருக்கலாமாம். அந்த அளவுக் காமெடி களைகட்டுகிறதாம். அதேபோல நடனக்காட்சிகளிலும் அவர் அஜித்திடம் நிறைய வேலைவாங்கியிருக்கிறாராம்.

இப் படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்க, பாடல்களை கவிஞர் பா.விஜய்,சினேகன் ஆகிய இருவரும் எழுதியுள்ளனர். அறிமுகக் காட்சிகளை ஹொங்கொங்கில் படமாக்கியுள்ளனர்.அங்கு தான் ஏகன்படத்தை சில சேஸிங் காட்சிகள் இரண்டு சண்டைக் காட்சிகள் மற்றும் இரண்டு படக்காட்சிகளோடு தொடங்கினார் ராஜுசுந்தரம். இடையில் ஊட்டி, சென்னை, ஏற்காடு போன்ற இடங்களிலும் படப்பிடிப்பை நடத்தியவர். இறுதிக் கட்டப் படப்பிடிப்பை நியூஸிலாந்தில் இரு பாடல் காட்சிகளோடு முடித்திருக்கிறார். ஏற்காட்டில் ஒரு கல்லூரியில் ஸ்பெஷல் அனுமதி வாங்கி படப்பிடிப்பை நடத்தியுள்ளனர் ஏகன் குழுவினர்.

ஆர்ட் டைரக்டர் மில்லன் தேர்ந்தெடுத்த எல்லா அற்புதமான லொக்கேஷன்களையும் தனது கேமராவுக்குள் அதை விட அழகாக அள்ளியிருக்கிறாராம் ஒளிப்பதிவாளர். அர்ஜுன் ஜனா, பி.சி ஸ்ரீராமின் அசிஸ்டென்டான இவர் ஹிந்திப் படங்களில் தரம் மற்றும் துல்லியத்திற்கு இணையாக இந்தப்படத்திற்கு ஒளிப்பதீவு செய்திருக்கிறார் என்கின்றனர். அஜித்தை அவ்வளவு அழகாகக் காட்டியிருக்கிறாராம்.

சண்டைக் காட்சிகளில் அசத்தியிருக்கிறாராம் ஸ்டன் சிவா. பிதாமகன் படத்திற்குப் பின்னர் அந்தப் படத்தின் சண்டைக்காட்சி பெரிய அளவில் பேசப்படும் என்கின்றனர்.

தமிழ்ப் படங்களை வெளிநாட்டு மக்களுக்குக் கொண்டு சென்ற ஐங்கரன் இண்டர்நேஷனல் கருணாமூர்த்தி இந்தப் படத்தை தனது நிறுவனம் மூலம் அருண்பாண்டியனுடன் இணைந்து தயாரித்திருக்கிறார். இணை தயாரிப்பு விஜய குமார். மக்களிடம் எப்படி ஒருபடத்தை கொண்டுசெல்ல வேண்டும் என்ற வியாபார யுத்திகள் தெரிந்த இந்தக் கூட்டணி இந்தப்படத்தை அதிக பொருட் செலவில் மிகப் பிரமாண்டமாக தயாரித்து வெளியிடுகின்றனர்.

ரஜினி அன்பாக கொடுத்த இமாலயாவின் மாஸ்டர் என்கிற புத்தகத்தைப் படித்திலிருந்து அஜித் ரொம்பவே மாறிவிட்டார். அந்தப் புத்தகம் அவருக்குப் பொறுமையை அதிகம் போதித்திருக்கிறது போலும் முன்பெல்லாம் ஆக்ரோஷமாக பேசி வந்தவர் இப்போது கோபப்படுவதில்லை. அமைதியைத் தேடுகிறார். படப்பிடிப்பு இல்லாத நாட்களில் கோவில்களுக்குச் சென்று வருகிறார்.அண்மையில் சீரடி சென்று வந்தவர் ஏற்கெனவே திருப்பதி சென்று வந்திருக்கிறார் அதே போல கேரளாவில் உள்ள பகவதி அம்மன் கோவில் ரம்ஜானின் போது முக்கிய மசூதி ஒன்றுக்கு என்று மதம் பார்க்காமல் புனித பயணங்கள் மேற்கொண்டவர் வேளாங்கண்ணி மாதா கோவிலுக்கும் தவறாமல் சென்று வந்திருக்கிறார்.

அஜித்தின் அடுத்த படத்தை சிவாஜி புரொடக்ஷன்ஸ் தயாரித்து கௌதம்மேனன் இயக்கவுள்ளார் இப் படத்திற்கு சூராங்கனி என்று பெயர் வைத்திருக்கின்றனர். அதற்கு அடுத்து அவரது 50ஆவது படத்திற்கான சரியான கதையும் இயக்குநர் தேர்வும் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. 50ஆவது படம் என்பது எந்தவொரு நடிகருக்கும் அவரது சினிமா பயணத்தில் முக்கியமான ஒன்று என்பதால் அஜித் ஒப்புக்கொள்ளும் படம் அவரது ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு எந்த விதத்திலும் குறைவில்லாமல் இருக்கும் என்கிறனர். அண்மையில் அஜித் பொய் சொல்ல போறோம் படத்தையும் சரோஜா படங்களைப் பார்த்திருக்கிறார். அவர் கடைசியாக பார்த்து ரசித்த படம் எது தெரியுமா ?அட இது கூட தெரியாதா?" ஏகன்" தான்!

# நூறுகோடி ரூபாய் செலவில் கமலின் 'மர்மயோகி'

படத்துக்கு படம் வித்தியாசம், ஹாலிவூட் படங்களையே மிஞ்சும் பிரம் மாண்டம் உலகையே திரும்பிப் பார்க்க வைக்கும் வித்தியாசமான நடிப்பு என உலக நாயகனாக விளங்கி வரும் கமல்ஹாசன் பத்து வேடங்களில் நடித்து அசத்திய தசாவதாரம் படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது அல்லவா இந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அவரது அடுத்த படத்தை இன்னும் பெரிதாக ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டனர் ரசிகர்கள். அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் கமல்ஹாசனே கதை எழுதி நடித்து இயக்கி பிரம்மாண்டமாக உருவாக உள்ள படம் மர்மயோகி. இந்தப்படம் தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தி ஆகிய மூன்று மொழி களில் சுமார் நூறு கோடி ரூபாய் செலவில் உருவாக இருக்கிறது. இப் படத்தை கமல்ஹாசனின் ராஜ்கமல் இண்டர் நஷனலும் பிரமிட் சாய்மீரா நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறது.

மர்மயோகி கேரக்டருக்கு நீண்ட அடர்த்தியான தாடி வேண் டும் என்பதற்காக அதை வளர்க்க ஆரம்பித்துள்ளார் கமல். ஏழாம் நூற்றாண்டில் நடக்கிற கதை மர்மயோகி. இதில் ராஜாவாக கமல் நடிக்கிறார். கமலின் முதல் மனைவியாக ஸ்ரேயா நடிக்க இருக்கிறார். இன்னொரு நாய கியாக திரிஷா-நடிக்க இருக்கிறார். வில்லியாக ஹிந்தி நடிகை ஹேமமாலினி நடிக்கிறார்.

அத்துடன் பாலிவூட்டில் பிரபலமாக இருக்கும் கஜோலும் ஒரு கேரக்டரில் நடிக்க இருப்பதாக சொல்லப்படுகிறது. பிரபல தெலுங்கு நடிகரான வெங்கடேஷ் ஒரு பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். நாசரும் ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறார்.



ஒரு கேரக்டரில் பத்மப்ரியாவும் நடிப்பதாக இருந்தது. ஆனால் கதையில் சில மாற்றங்கள் செய்ததால் அவருக்கான கேரக்டர் சரியாக அமையவில் லையாம்.

ஹாலிவூட் ஒப்பனையாளர், மும்பையைச் சேர்ந்த ஒளிப் பதிவாளர், ஸ்டண்ட் மாஸ்டர் எனப் பெரிய பெரிய டெக்னீஷியன் கள் "மர்மயோகி" யில் பணிபுரிய உள்ளனர். ரஜினி- ஷங்கர் கூட்டணியில் உருவாகி வரும் "எந்திரன்" படத்திற்கு இசைய மைக்கும் ஏ.ஆர்.ரஹ்மானே இந்தப் படத்திற்கும் இசை அமைக்க உள்ளார்.

இப்படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பு ஹைதராபாத்தில் அடுத்த மாதம் தொடங்கி தொடர்ந்து ஒருமாதம் நடக்க இருக் கிறது. அதன் பின்னர் மும்பை அருகே உள்ள ஒரு அழகான லொகேஷனில் ஒரு மாதம் படப் பிடிப்பு நடக்க இருக்கிறது. அதனைத் தொடர்ந்து தாய்லாந்து நாட்டுக்குச் செல்ல இருக் கின்றனர். அங்கு எத்தனை நாட்கள் படப்பிடிப்பு நடைபெறுமென்பது இன்னும் முடிவாகவில்லை.

இந்தப் படத்தில் நடிக்கும் நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் யாரும் இப் படம் பற்றி வெளியில் சொல்லக் கூடாது என்று அன்புக்கட்டளை போட்டிருக்கிறார் கமல்ஹாசன். அதேபோல் படப் பிடிப்பில் வெளி ஆட்கள் யாரும் நுழைய முடியாத வண்ணம் இரண்டு அடுக்கு பாதுகாப்பை அமைக்க உள்ளனராம். "மர்மயோகி" பற்றி வெளிவரும் செய்திகள் குறித்து கமல்கூறுகையில், "மர்மயோகி" பற்றி மிகையான சில செய்திகளை மீடியாக்கள் வெளியிட்டு வருகிறது. இதற்குக் காரணம் என் மேல் அவர்கள் வைத்துள்ள அன்புதான். "மர்மயோகி" இவ்வளவு கோடி ரூபாய் செலவில் உருவாக இருக்கிறது என்று அவர்கள் வெளி யிடுகின்ற உண்மைக்கு மாறான செய்திகளைக் கூட நான் என்னை யாக்கவே முயற்சித்து வருகிறேன். என்னுடைய மீடியா நண்பர்களை நான் ஏமாற்ற விரும்பவில்லை என்றார். இப்படி கமல் சொல்வதற்கான காரணம், படம் ஆரம்பிப்பதற்கு முன்னாடியே பலதரப்பட்ட பொய்யான தகவல்கள் வெளிவருவதுதான். சரி. வந்த செய்திகளெல்லாம் மெய்யோ, பொய்யோ ,கமல்ஹாசனது மனதில் இருக்கும் " மர்மயோகி" விரைவாக உருவாகி அடுத்த தீபாவளிக்காவது ரசிகர்களுக்கு தரிசனம் தருவாரா? பொறுத்திருந்து பார்ப்போம்!

# தனுஷை 'தடதடக்க' வைத்த தமன்னா



முதன்முறையாக தனுஷ் விவேக் இணைந்து நடிக்கும் படம் படிக்காதவன். இப் படத்தை இயக்கி வருகிறவர் சுராஜ். இவர் ஏற்கனவே சுந்தர் சி நடித்த தலைநகரம் அர்ஜூன் நடித்த மருதமலை போன்ற படங்களை இயக்கியவர். "படிக்காதவன்" நகைச் சுவையும் ஆக்ஷன் காட்சிகளும் நிறைந்த படமாம். இந்தப் படத்தின் கதை தனுஷுக்காக உருவாக்கப்பட்டது போல இருக்கிறதாம். அதனால் அந்த கதையில் விரும்பி நடித்தி ருக்கிறார் தனுஷ். இப்படத்தில் வித்தியாசமான வேடத்தில் தோன்றும் தனுஷுக்கு ஜோடியாக தமன்னா நடித்திருக்கிறார். கதைக்கு முக்கியத்துவம் உள்ள படங்களிலேயே நடித்து வரும் தனுஷ் இயக்குநர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்டு அவர்களை முழுமையாக நம்பி நடித்து வருகிறார்.

படிக்காதவன் வழக்கமான கதை இல்லையாம். ரசிகர்களுக்கு எதிர்பாராத திருப் பங்களை தரும் படமாக இருக்குமாம். தனுஷ்-விவேக் ஆகியோரின் காமெடி பட்டையைக் கிளப்புமாம். இது வரை காமெடியை பொதும் எதிர்பார்க்காமல் இயக்குநர்கள் உருவாக்கும் பாத்திரத்தில் நடித்து வந்த தனுஷ் இந்தப் படத்தில் தனக்குள் இருக்கும் காமெடி சென்ஸை நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறாராம். இந்தப் படத்தின் நகைச்சுவைக் காட்சிகள் ரசிகர்களுக்கு புதிதாக இருக்குமாம். விஷால் நடித்த தாமிரபரணி படத்தைத் தயாரித்த விஜயா புரொடக்ஷன்ஸ் இந்தப் படத்தை பெரும் பொருட் செலவில் தயாரித்து வருகி றது. இப்படத்தில் வில்லன்களாக சுமன் "சாயாஜி ஷிண்டே நடித்துள்ளார். மணிசர்மா இசையில் படத்தில் ஐந்து பாடல்கள் இடம் பெறுகிறது. பாடல்களை பா.விஜய், தபுசங்கர் எழுதியுள்ளார்கள். படத்தில் இடம் பெறும் நான்கு சண்டைக் காட்சிகளை வித்தியாசமான முறையில் படமாக்கியுள்ளார். ஸ்டண்ட்மாஸ்டர் தளபதி தினேஷ்.

இந்தக் காட்சியை படமாக்கியபோது கதாநாயகி தமன்னா குறுக்கே பயமில்லாமல் ஓடிவர வைத்து மேலே பறந்து வண்டிகளில் இருந்து கீழே விழுகின்ற போது அவர் தலையில் விழுந்து விட நேர்ந்தது. இதனைக் கொஞ்சமும் எதிர்பாராத தமன்னா மயிரிழையில் அந்த ஆபத்திலிருந்து தப்பி ஓடி வர இயக்குநர் சுராஜும் கதாநாயகன் தனுஷும் அவரை ஓடிப் போய் காப்பாற்றியிருக்கின்றனர். அதை இப்போது நினைத்தாலும் நெஞ்சு சுக்குநூறாகும் என்றார் தனுஷ் கூறி வருகிறார். ஒரு பாடலை ஸ்விட்ஸர்லாந்தில் படமாக்கியுள்ளனர். இன்னொரு பாடலை ஸ்பெயின் நாட்டில் படமாக்க உள்ளனர். தீபாவளிக்கு வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்தப்படம் பொங்கலுக்குத்தான் வெளிவருமாம்.

# சிலம்பரசனின் மூன்று படங்கள்



தீபாவளிக்கு வெளிவரும் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சிம்புவின் சிலம்பாட்டம் ஒரு பாடல் காட்சியின் படப்பிடிப்பு மற்றும் சிம்புவின் டப்பிங்பேசும் பணிகள் மிச்சமிருப்பதால் தீபாவளி கழித்து வருகிறது.


ஏராளமான வெற்றிப்படங்களுக்கு ஒளிப்ப திவு செய்த எஸ். சரவணன் இந்தப் படத்தின் கதை, திரைக்கதை வசனம் எழுதி இயக்கி வருகிறார். அவரது சிஷ்யனும் வெயில், நேபாளி போன்ற படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தவருமான மதி இப் படத்திற்கு ஒளிப்பதிவு செய்து வருகிறார்.

இந்தப்படத்தில் சிலம்பரசன் மூன்று கெட் அப்பில் நடித்துள்ளார். அதில் ஒன்று ஐயர் வீட்டுப் பைன் மாதிரி குடுமிவைத்த வேடம். சிம்புவின் ஜோடி யாக புது முகம் சானகான் நடித்திருக்கிறார். இன் னொரு நாயகியாக ஸ்நேகா நடித்திருக்கிறா. ஏற்கனவே காளை படத் தில் சிம்புவுக்கு இளம் வயது அத்தையாக நடிக்க அவரை அழைத்த போது மறுத்தார். இப் போது இதில் இன் னொருநாயகியாக காஜல் என்ற பாத்திரத் தில் சிம்புவுடன் நடித்தி ருக்கிறார். இதற்காக தெலுங்கில் நடித்த ஒரு படத்தில் திகதி களை தந்து ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்.




முக்கிய பாத்திரம் ஒன்றில் பிரபு நடிக்க சந்தானமும், கருணஸும் காமெடியில் கலக்கு கின்றனர். மேலும் மனோபாலா, சாம்ஸ், நிரோஷா,பிரகதி என ஏகப்பட்ட நடிகர்கள் நடித்திருக்கின்றனர். இந்தப் படத்தை கே.முரளிதரன், வி.சுவாமிநாதன்இருவரும் இணைந்து தயாரிக்கின்றனர்.யுவன் சங்கர்ராஜா இசையில் கவிஞர் வாலி,கங்கை அமரன், நா. முத்துக்குமார் ஆகியோர் பாடல்களை எழு , சிலம்பரசனும் ஒரு பாடலை எழுதியுள்ளார். படத்தில் இடம்பெறும் ஐந்து பாடல்களில் இரு பாடல்களை சிலம்பரசன் பாடியுள்ளார். அதில் ஒன்று ரஜினி நடித்த நல்லவனுக்கு நல்லவன் படத்தில் இடம்பெறும் வச்சுக்கவா உன்னை மட்டும் நெஞ்சுக்குள்ள என்ற பாடலின் ரீமிக்ஸ் அந்தப் பாடலை நான்கு நாட்கள் பிரசாத் ஸ்டூடியோவில் பிரம்மாண்ட செட் அமைத்துப் படமாக்கியுள்ளனர். ரஜினி சீரியல் பல்பு உடையில் ஆடியது போல சிலம்பரசனும் இந்தப் பாட்டில் அதே போல உடை யணிந்து நடனம் ஆடியுள்ளார்.

இந்தப் படம் சிலம் பரசனுக்கு முழுக்க முழுக்க வித்தியாச மான படமாக அமைந் திருக்கிறது.



இதுவரை அவர் நடித்து வந்த கமர்ஷியல் படங்களில் இருந்து இந்தப் படம் மாறுபட் டது. இளைஞர் களைக் கவரும் படத்தில் மட்டு மே இது வரை நடித்து வந்தவர் இந்தப் படம் மூலம் அனைத்து தரப்பு மக்க ளையும் சென்ற டையும் விதமாக எல் லோருக்கும் பிடிக்கும் விதமாக நடித்திருக் கிறார். அந்த மாதிரி கதை இந்தப் படத்தில் அமைந்திருக்கிறது. படம் முழுக்க அதிரடி யான ஆக்ஷன். கலகலப்பான காமெடி காட்சிகள் இடம்பெறுகின்றன.

இந்தப் படத்தை அடுத்து ஜெமினி ஃபிலிம் சர்க்யூட் மற்றும் மும்பை டெலி ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் வாடா வாடி படத்தில் நடிக்கிறார். இதில் அவருக்கு ஜோடியாக சரத்குமார் மகள் வரலட்சுமி நடிக்கிறார்.இது அவர் அறிமுகமாகும் படமும் கூட. அந்தப் படத்தின் கதை, திரைக்கதை , வசனம் எழுதி இயக்குகிறார் விக்னேஷ் சிவா .இவர் பல முன்னணி இயக்குநர்களிடம் உதவியாளராக பயிற்சி பெற்றவர்.தரண் இசையமைக்கும் அப்படத்திற்கு முனைவர் நா. முத்துக்குமார் பாடல்களை எழுதுகிறார்.

இப் படத்தின் படப்பிடிப்பு முழுவதும் கனடா நாட்டில் நடைபெறவுள்ளது. இதையடுத்து சிம்பு கெட்டவன் படத்தில் நடிப்பார் என்று தெரிகிறது. இதற்காக முன்பு எடுத்து காட்சிகளை தூக்கி வைத்து விட்டு புதிய காட்சிகளை அவர் எடுப்பார். அதனால் நடித்த நடிகைகள் இதில் நடிக்கமாட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

# நோத்முதல் கோபல்லவா வரை 135



### சேர் யேம்ஸ் பீரிஸ் அவர்கள்

கோல்புறூக் திருத்தத்தின் பயனாய் 1833 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சட்டசபையில் அன்று தொடக்கம் 1923 ஆம் ஆண்டுவரை 90 ஆண்டுகளாய் ஆள்பதி அவர்களே சட்டசபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி வந்தார்கள். ஆனால் 1923 ஆம் ஆண்டில் ஏற்பட்ட டிவன்சயர் மனிங் திருத்தத்தின் பயனாய் ஏற்பட்ட மாறுதல்களுள் ஒன்று சட்டசபைக் கூட்டங்களுக்குச் சபைப் பிரதிநிதியொருவர் தலைமை தாங்கலாம் என்பது. சம்பிரதாயப்படி ஆள்பதி அவர்களே தலைவராய் அமைந்தபோதிலும் உபதலைவர் என்றொரு பதவியில் சபை அங்கத்தவர் ஒருவர் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கலாம் என விதிக்கப்பட்டது.

சட்டசபைத் தலைவராய் இருக்கக் கூடியவர் இராமநாதனை விட வேறு யார்? ஆள்பதி அவர்களும் சட்டசபை அங்கத்தவர் அனைவரும் இராமநாதன் அவர்கள் தலைமை தாங்குவதையே விரும்பினர். ஆனால் இராமநாதன் அவர்கள் பீரிஸ் அவர்கள் தலைவராகத் தெரியப்படுவதையே விரும்பினர். அன்றித் தலைவர் தெரிவு ஏகமனதாக இருத்தல் வேண்டும் எனவும் விரும்பினார். அதன்படி இராமநாதன் அவர்கள் வகுத்த வழியிலே ஆள்பதி அவர்களும் நடந்தார்கள். திரு பீரிஸ் அவர்களை திரு E.W. பெரேரா முன்மொழிய திரு கதிரவேற்பிள்ளை பாலசிங்கம் பின்மொழியத் தலைவர் தெரிவு நல்லெண்ணத்தோடு ஏகமனதாக நிறைவேறிற்று. பீரிஸ் அவர்களும் தலைமைப் பீடத்தைத் தகுதியோடு அலங்கரித்தார்கள். இராமநாதனின் பெருந்தன்மையை ஆள்பதி முதலாக அனைவரும் பாராட்டினர். அது இராமநாதனின் தியாகம் எனவே அவர்கள் கூறினர்.

### மீள் பார்வை

பீரிஸ் சட்டசபைத் தலைவரானதும், டொன்பாரன் யயத்திலக உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரின் முதல்வராய்த் தெரியப்பட்டுச் சபைமுதல்வராய்க் கடமையாற்றினார்.பீரிஸ் சட்டசபையில் தலைமை வகித்த போதிலும்,அவர் இக்காலத்து வாசகர்போல இருக்கவில்லை. அவர் தலைமை தாங்கிக் கொண்டே எந்த அலுவலிலும் தீவிரமாக கலந்து பேசக்கூடிய வாய்ப்பு இருந்தது. அவர் சட்டசபையிலமர்ந்திருந்த உத்தியோக அங்கத்தவரையும் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரையும் கண்ணியமாகவே நடத்தினார் என்பர்.

பீரிஸ் 5.5.1930 இல் இறந்தபோது நல்ல மனிதன் ஒருவர் இறந்துவிட்டார் என்றே பத்திரிகைகள் அனுதாபந் தெரிவித்தன. லண்டன் ரைம்ஸ் என்னும் பத்திரிகை அவரின் பெருமையை ''இலங்கையில் மிதவாதத் தேசிய பெரியார்'' என்றும் ''தங்கமான மனிதன்'' என்றும் குறிப்பிட்டது.

பீரிஸ் கொழும்பு மாநகரசபையில் 10 ஆண்டுகளும் இலங்கைச் சட்டசபையில் 9 ஆண்டுகளும் அரும்பணியாற்றியுள்ளார். அவர் இறந்தபின் சட்டசபையின் உபதலைவராய் டொன்பாரன் யயத்திலக தெரியப்பட்டார்கள்.

டொன்பாரன் யயத்திலக வயது சென்ற பின்னரே மேற்படிப்புப் படித்தவராயினும், சிங்கள பௌத்த கலாசாரத்துறையில் அதிக பாண்டித்தியமுள்ளவராய்ப் பிக்குகளாலும் பொதுமக்களாலும் நன்கு மதிக்கப்பட்டார். அவர் பௌத்த வாலிப சங்கத்தின் தலைவராயும், இராசாங்க ஆசிய சங்கத்தின் இலங்கைக் கிளையின் தலைவராயும் இருந்து பணிசெய்தவர். சிங்களவரின் தினமின பத்திரிகையில் காலத்துக்குக் காலம் அரிய கட்டுரைகள் எழுதி அதன் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தவர்.

### டொனமூர் யாப்புத் திருத்தம்

டிவன்சயர் -மனிங் திருத்தத்தின் பயனாக 1924 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்ட சட்டசபையில் இலங்கையர் 90 ஆண்டுக ளாக கேட்டு வந்த கோரிக்கைகள் ஓரள வுக்கு நிறைவு செய்யப்பட்டன. இலங்கையர் அதுகாறும் காலந்தோறும் கேட்டுவந்தவை.

1. சட்டசபையில் உத்தியோக அங்கத்தவரிலும் பார்க்க உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் அதிகமாக இருத்தல்.

**க.சி.குலரத்தினம்**

2. பிரதிநிதிகள் ஆள்பதியால் நியமனம் பெறாமல் மக்களால் தெரியப்படுதல்.
3. பிரதிநிதிகள் வகுப்புவாரியாகவே இன அடிப்படையிலே தெரியப்படாமல் ஆள்புல அமைப்பில் தெரியப்படுதல்.
4. சட்ட நிறைவேற்று சபையில் உத்தியோக அங்கத்தவரோடு உத்தியோகப் பற்றற்றவரும் இடம்பெறுதல்.
5. சட்ட சபைக்கூட்டங்களுக்கு ஆள்பதி தலைமை தாங்காமல் சபையில் உள்ள அங்கத்தவர் ஒருவரே தலைவராக தெரியப் படுதல்.

(தொடரும்)



யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற " நமசிவாய அரும்பு" மலர் வெளியீடு, ஆசிரியர் தின விழா நிகழ்வுகளின்போது பாடசாலையின் அதிபர் தி.சோமசேகரம் தலைமையுரையாற்றுவதையும். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்விக் கோட்டப் பணிப்பாளர் திருமதி வ .சிவபாலன் ஆகியோர் உரையாற்றுவதையும், கோப்பாய் றோ.க. பாட சாலை அதிபர் ச.லலீசன் நூலின் மதிப்பீட்டுரை யாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோருள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# தெற்காசியாவில் வறுமைக் குறைப்பும் பொருளாதார வளர்ச்சியும் 10

ஆனாலும் அந் நாடுகள் அதிலிருந்து



சடுதியாக மேலெழுந்துள்ளன. அதற்கு முதன்மைக் காரணம், அவை பின்பற்றிய சிறந்த கொள்கைகளே யாகும்.

எனவேதெற்காசியப் பொருளாதாரங்களும் இத்தகைய சவால்களின் மத்தியில் மீட்சி பெறுவதற்கு பல கொள்கைத் தெரிவுகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

### கொள்கைத் தெரிவுகள்

பொருளாதார வளர்ச்சியை அதிகரித்து நீடித்திருக்கச் செய்தல் தொடர்பிலான கொள்கைகள் தனிப்பட்ட நாடுகளது சூழ்நிலைக் கேற்ப எடுக்கப்படவேண்டும்.

ஆயினும் இப்பிரச்சினை அல்லது எழுவினா எல்லா நாடுகளுக்கும் பொதுவான கருவாகவே (Theme) உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பகுதியில் இரண்டோ அல்லது அதற்கு கூடுதலான இப் பிராந்திய நாடுகளால் முகங்கொடுக்கப்படும் உயர்ந்த முன்னுரிமையான கொள்கைத் தெரிவுகள் பற்றியே அழுத்தங் கொடுத்து நோக்கப்படுகிறது.

உற்பத்தித் திறனை அதிகரித்தல், முதலீட்டினை கவருதல்,தொழிலாளர் தரத்தினை மேம்படுத்தல், சமத்துவமின்மையை குறைத்தல்,மற்றும் வளப் பகிர்வில் ஒருங்கிணைந்த செயற்பாடு போன்றன தொடர்பான கொள்கைகளே முக்கியம் பெறுகின்றன.

**◆ உற்பத்தி திறனை அதிகரித்தலும் முதலீட்டை கவர்தலும்**

இதற்குள் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளுதல், பேரின பொருளாதார உறுதியை நிச்சயப்படுத்தல், கீழ்க்கட்டுமான வசதிகளை அதிகரித்தல் மற்றும் பன்முகப் படுத்தல் போன்ற விடயங்கள் முதன்மை பெறுகின்றன.

**◆ உள்நாட்டு முரண்பாட்டினை / போரினை தீர்த்தல்**

நீண்டகாலம் நீடிக்கும் முரண்பாடுகள்/ குழப்பங்கள் ஏற்கனவே பலமற்றுள்ள நிர்வாக இயலுமையை மோசமாக பாதிப்பதுடன் மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான அரசின் வலுவினையும் தகர்க்கின்றன.

மேலும் இத்தகைய உள்நாட்டு யுத்தம், குழப்பங்கள் பொது முதலீடுகளிலிருந்து பெறுமதிமிக்க நிதி மூலங்களை இராணுவ பாதுகாப்பு செலவீனம் நோக்கி திசை திருப்புகின்றன. இலங்கையின் இறுதிவருட வரவு செலவுத் திட்டத்தில் இதனை நிதர்சனமாக காணலாம்.

சமூக பொருளாதார சுட்டிகளில் (Socio -economic indicators) தெற்காசியாவிலேயே சிறந்த நிலையிலுள்ள இலங்கை, இன முரண்பாட்டினால் அரைச் சிறைக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் சென்மதி நிலுவைகளில் பாரிய சுமையினை தாங்க வேண்டியுள்ளது.

எனவே உள்நாட்டு முரண் பாடுகளை தீர்த்தல் என்பது அபிவிருத்திக்கான உள்ளார்ந்த ஆற்றலை (Development Potential) வெளிப்படுத்துவதில் தரவைக் கொண்டு வரும்.

**◆ பேரின பொருளாதார உறுதியை நிச்சயப்படுத்தி நிலை பேணுடையதாக்கல்**

பேரின பொருளாதார ஸ்திரமற்ற தன்மை காரணமாக முதலீட்டு வாய்ப்புகள் குறைவடைகின்றன என்பதனை பல்வேறு பொருளாதாரங்களின் அனுபவங்களிலிலிருந்து அறியமுடிகின்றது.

இந்த வகையில் இந்தியா 9% பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றபோதும் அதன் கட்டமைப்பு ரீதியான தடைகள் (Structural impediments), தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் இருந்தான முழு நன்மைகளைப் பெற தடையாக அமை கின்றன. (ADB,Asian Development outlook - 2001) இலங்கையும் உயர்வான வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையுள்ள நாடாக உள்ளபோதிலும் இங்கு உள்நாட்டு யுத்தத்தினை தீர்த்து கொண்டால் இப் பற்றாக் குறையை வெகுவாகக் குறைத்து விடமுடியும் எனக் கூறப்படுகின்றது.

பேரின பொருளாதார உறுதியை ஏற்படுத்த கடன் சுமைகள் குறைக்கப்பட வேண்டியுள்ளதுடன் சில நாடுகளில் இடம்பெறும் கடனாக்கத்தின் துரிதமான விரிவாக்கம் (குறிப்பாக பாகிஸ்தானின் இத்தகைய போக்கு பணவீக்கத்தினை உயர்த்துவதற்கு தூண்டுவிசையாக அமைகின்றமை கவனிக்கத் தக்கதாகும்) மட்டுப்படுத்தப்படவும் வேண்டும். மேலும் பொருளாதார உறுதியை ஏற்படுத்த துரிதமான சனத்தொகை அதிகரிப்பு கட்டுப் படுத்தப்படவேண்டும்.

இந்த வகையில் மாலைதீவு மெதுவான சனத்தொகை அதிகரிப்பினால் வாழ்க்கைத் தரத்தினை வெகுவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதேநேரம் பாகிஸ்தானின் உயர்வான சனத்தொகை வளர்ச்சி(ஏறக்குறைய வருடாந்தம் 3.1% அதிகரிப்பு) அதன் பொருளாதார வளர்ச்சியை பாதித்து வருகின்றமையும் கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

சார்க் நாடுகளில் காணப்படும் பலவீனமானதும் திறனற்றதுமான நிதித்துறை சீரமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் சமூக நல செலவீனங்களுக்கான நிதியினை திரட்டுவதற்கு வரி வருமானங்களை ஒன்று திரட்டுகின்ற ஒழுங்கமைக் கப்பட்ட வரிமுறை ஒன்றும் அவசியமாகிறது.

**◆ கீழ்க்கட்டுமான வசதிகளின் தரத்தினை உயர்த்துதல்**

இது போட்டித்தன்மை, உற்பத்தி திறன் விருத்தி என்பவற்றுக்கு மிக முக்கியமாகும்.பங்களாதேசின் பிரதான துறைமுகமான சிற்றாக்கொங் (Chittagongh) வினைத்திறனற்ற, செலவு கூடிய ஒரு செயற்பாட்டு மையமாக உள்ளது.அத்துடன் இந் நாட்டின் தயாரிப்புத் துறை மந்தமாக உள்ளமைக்கு முக்கிய காரணமாக உட்கட்டுமான விருத்தியின்மை உள்ளமை கவனிக்க வேண்டிய விடயமாகும்.

**விமலேந்திரன் பாரதிதாஸ்**
உதவி விரிவுரையாளர்
பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

(தொடரும்)

# மோதலில் ஏற்படும் உயிரிழப்புக்கள் பற்றிய விபரம் வெளியிடுவது இடைநிறுத்தம்

## பாதுகாப்பு அமைச்சகம் முடிவு

(கொழும்பு)

இலங்கையின்வடபகுதியில் விடு தலைப் புலிகளுக்கு எதிராக தற்போது மேற் கொள் ளப் பட்டுவரும் இராணுவ நடவடிக்கையில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந் தவர் களின் எண்ணிக்கையை வெளியிடு வதை பாதுகாப்பு அமைச்சகம் இடைநிறுத் தியுள்ளது.

நடைமுறை பாதுகாப்பு காரணங்கள் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் உயிரிழப்புகள் மற்றும் காயமடைந்த வர்க ளின் எண்ணிக்கை பற்றிய செய்திகள் இரா ணுவ தாக்குதல்களின் வெற்றியைப் பாதிக் கக் கூடும் என்று பாதுகாப்பு அமைச்சகம் கூறி யுள்ளது.

மிக அண்மையில் நடந்த சில மோதல் களில் இலங்கைத் துருப்பினர் பலர் கொல் லப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தகவல் வெளியிட்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட உயி ரிழப்பு எண்ணிக்கை விபரங்களை வேறொரு அரசாங்க திணைக்களம் மறுத்திருந்தது குறிப் பிடத்தக்கது. (ஓ)

### சுவிஸ் இளையோர் அமைப்பினரின் உறங்கா நிலைப்போராட்டம்

(கொழும்பு)

சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பி னரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உறங்காநிலைப் போராட்டமொன்று முன்னெ டுக்கப்பட்டுள்ளது. வன்னியில் இலங்கைப் படை யினரனது போர் முன்னெடுப்புக்களி னால் இடம் பெயர்ந்து அல்லலுறும் தமிழ் உற வுகளை நினைவுகூர்ந்தும் மற்றும் தமிழ் நாடு முழுவதும் மாணவ சமுதாயத்தால் மேற் கொள்ளப்படும் வகுப்பு புறக்கணிப்பு போராட் டத்திற்கு ஆதரவைத் தெரிவித்தும் இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (6)

# அழகிய முட்டை நாற்றம் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும்

## ஆய்வில் கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

அழுகிய முட்டையிலிருந்து வெளியாகும் துர்நாற்ற வாயு இரத்த அழுத்தத்தைக் கட் டுப்படுத்தும் என்று கனடா விஞ்ஞானிகள் தெரி வித்துள்ளனர்.

முட்டை என்றாலே சிலக்கு அலர்ஜியாக இருக்கும். அதுவும் அழுகிய முட்டை என்றால் கேட்கவே வேண்டாம். யாராக இருந்தாலும் பல மைல் தூரத்துக்கு அப்பால் ஓடி விடுவார்கள்.

ஆனால் அந்த கூழ்முட்டையில் ஏராள மான மருத்துவ குணம் இருப்பதாக கனடா வைச் சேர்ந்த லேக்ஹெட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அழுகிய முட்டையில் இருந்து வெளி யாகும் ஹைட்ரஜன் சல்பைட் வாயு மனித இரத்த நாளங்களைத் தளர்வாக்கி இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது என்று அந்த பல் கலைக்கழகத்தின் மூத்த விஞ்ஞானிகள் ரூய் வாங், சாலமோன் ஆகியோர் தங்களது ஆய் வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

எலிகளிடம் மேற்கொள்ளப்பட்ட நீண்ட நாள் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இந்த உண்மையை கண்டறிந்திருப்பதாக அவர் கள் ஆணித்தரமாக கூறுகின்றனர்.

எனவே இரத்த அழுத்தத்தை கட்டுப் படுத்த தற்போது நடைமுறையில் உள்ள மருத்துவ முறைகளை மாற்றிவிட்டு தங்களது அழு கிய முட்டை மருத்துவத்தை கடைப் பிடிக்கலாம் என்று அவர்கள் ஆலோசனை கூறியுள் ளனர். (ஓ)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| உதிர்வு | மலர்வு |
|---|---|
| 10 | 09 |
| 11 | 07 |
| 2004 | 1924 |



திதி திரயோதசி

## திரு. தர்மலிங்கம் பரராஜசிங்கம்

(புங்குடுதீவு 1ஆம் வட்டாரம்)

ஸ்தாபகர் : Jaffna Traders Jaffna.

எங்களுக்காய் உழைத்து எங்களுக்காய் வாழ்ந்து
எங்களுடன் அன்பு மொழி பேசி வாழ்ந்த அப்பாவே
நாம் எல்லோரும் ஆறமுடியாத துயர் அடைந்து
அவனியில் வாடுகின்ற நிலைகாண வாரீரோ

அவனியில் எமை அன்புடன் ஆதரித்து
நானிலம் போற்ற எமை வளர்த்திட்ட
எம் அன்புத் தந்தையே -உமை
தரணியில் நாம் வாழும் மட்டும் என்றும் மறவோம்
மறவோமே.

27/7, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி/1718)

# மரண அறிவித்தல்



அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்

*(இளைப்பாறிய கொத்தணி அதிபர், கைதடி)*

பிறப்பு 05 03 1932

இறப்பு 24 10 2008

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தினை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட இளைப்பாறிய கொத்தணி அதிபர் சோமசுந் தரம் கணேசலிங்கம் அவர்கள் வெள்ளிக்கிழமை ( 24.10.2008) அன்று மாலை சிவபதமடைந்தார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும், வேலணை பிரபல வைத்தியரும் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபருமான திரு.இரா சரத்தினம் உருக்குமணி தம்பதி யினரின் மருமகனும், திருமதி புஸ்பல திகவதி கணேசலிங்கம் (இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயம்) அவர்களின் அன்புக் கணவரும்,

திருமதி வளர்மதி விவேகானந்தன் (கனடா), க.அருள் (விரி வுரையா ளர், சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), கலாநிதி சிவமதி சிவச் சந்திரன் (பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி அருள்மொழி (குழந்தை வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), கலாநிதி க.அருள்ராஜ் (U.K.) ஆகி யோரின் அன்புத் தந்தையும்,

திரு. சோ.விவேகானந்தன் (கனடா), திருமதி அ.சுகுணா (U.K.), திரு.க.க.சிவச்சந்திரன் (உதவி திட்டப் பணிப்பாளர், தேச நிர்மாண அமைச்சு, கொழும்பு (GTZ)), வைத்தியகலாநிதி அ.ஜானகி (தேசிய வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் அருமை மாமனாரும்,

அர்ச்சனா, ஆராதனா, யதுர்சன் (கனடா), அர்ச்சுன், அஸ்மிதா (U.K.), அஸ்வினி, அபிலாஷா, ஹர்சன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற கந்தையா சிவபாக்கியம் , காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி பு.சின்னையா (இளைப் பாறிய அதிபர்), பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் (புவியியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற புஸ்பரட்ணவதி, திருமதி ச.இராஜமலர் (அவுஸ்திரேலியா), திருமதி செ. சிவமலர் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற இரா.பாலச் சந்திரன் (மக்கள் வங்கி), திரு.இரா.ஜெயச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 26.10.2008 ஞாயிற்றுக் கிழமை பி.ப.2 மணியளவில் அன்னாரின் தற்காலிக இல்ல மான 16/1, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்,
திருமதி புஸ்பா கணேசலிங்கம்
(மனைவி-
இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)

16/1, மணல்தரை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 021 222 7739

(C-1869)



Lifeline

# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

## வன்னி மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகள்

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான உணவுப்பொருட்களுடன் ஐக்கிய நாடுகளின் சபையில் இரண்டாவது வாகனத் தொடரணி கடந்த வாரம் வன்னியைச் சென்றடைந்துள்ளது. கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் சுமார் 220,000பேருக்கு தேவையான உணவுத்தொகுதி உணவுப்பொருட்கள் இந்த தொடரணி மூலம் வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தன.

இந்த உணவுப்பொருட்கள் நேரடியாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 16ஆம் திகதி மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் நடைபெற்ற மனிதாபிமான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள் தமது மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதாபிமானப்



பணிகள் குறித்து விளக்கம் அளித்துள்ளன.

இம்மாதம் 2ஆம் திகதி முதல் 714 மெற்றிக் தொன் உணவுப்பொருட்கள் அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகளின் வாகனத்தொடரணிகள் மூலமும் வன்னிக்கு உணவுபொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை புளியங்குளம் நெடுங்கேணி பாதையில் ஏற்பட்ட போக்குவரத்து சீரின்மை காரணமாக உணவுப் பொருட்களை வன்னிக்கு கொண்டு செல்வதில் தாமத நிலை ஏற்பட்டதாகவும் தற்போது அந்தப் பாதை சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சாளர்ஸ் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு மழை பெய்து வருவதால் சில வேளைகளில் அந்தப் பாதையூடான போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்படும் என்பதனால் தொழில்நுட்பக் குழுவினரையும் செப்பனிடும் பணியாளர்களையும் அந்தப் பகுதியில் தற்காலிகமாக தங்கியிருக்குமாறும் தான்கோரியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்களின் உணவுப்பொருட்களுக்கான தேவையை பூர்த்தி செய்வதில் பல்வேறு நெருக்கடிகள் நிலவுகின்ற நிலையில் கிடைக்கின்ற உணவுப்பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரியவந்துள்ளது.

தமது தேவைகளை நிறைவேற்ற மக்கள் வங்கியிலிருந்து அதிகளவு பணத்தை மீளப்பெறுவதனால் வங்கிகளில் நிதித்திரவத்தன்மை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

147ஆவது ஐ.எ.எஸ்.சி. அறிக்கையின் படி மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 350 ரூபாவாகவும் கிளிநொச்சியிலிருந்து விசுவமடுவுக்கு பிரயாணம் செய்ய 12 ஆயிரம் ரூபாவும் புதுக்குடியிருப்புக்கு செல்வதற்கு 24ஆயிரம் ரூபாவும் உழவு இயந்திரங்களுக்கு அறவிடப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



பொருட்கள் மற்றும் சேவைகளை மற்றும் பெறுவதற்கான கட்டணங்கள் பல மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள பண நெருக்கடியினை பூர்த்தி செய்வதற்காக மக்கள் தமது உடமைகளை விற்பனை செய்யும் நிலைக்கு தள்ளப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 13ஆம் திகதி வங்கி அதிகாரிகள் வவுனியா அரசாங்க அதிபரிடம் நிதித்திரவத்தன்மை தொடர்பில் ஆராய்ந்துள்ளன. இது தொடர்பில் அரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ்சிடம் வினவிய போது வங்கிச் செயற்பாடுகளில் தேக்க நிலை இருப்பதாக வங்கி முகாமையாளர் தன்னிடம் எடுத்துக்கூறியதாகவும் தற்போது வங்கி முகாமையாளர்களை தங்களது வங்கிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஏற்பாட்டுள்ள நெருக்கடிகள் மற்றும் அவற்றைஎதிர்கொள்வதற்கான செயற்றிட்டங்கள் குறித்து அறிக்கைகளை தயாரிக்குமாறு தான் கோரியுள்ளதாகவும் அந்த அறிக்கைகள் தயாரிக்கப் பட்டதன் பின்னர் தீர்வுத்திட்டங்கள் குறித்து ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

இதேவேளை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அரசாங்க அதிபர்கள் தமதுமாவட்டங்களுக்கு மேலதிகமாக தேவைப்படும் பொருட்கள் குறித்த விபரங்களை தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவற்றை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கூறினார்.

இடம் பெயர்ந்துள்ள மக்களிற்கு தேவையான குடிநீர் வசதிகளை மேற்கொள்வதற்கான தண்ணீர் தாங்கிகளும் தற்காலிகமான மலசலகூட வசதிகளுக்கான பொருட்களும் கூடாரங்களும் குழந்தைகளுக் கான பால்மா உணவுப்பொருட்களும் சவர்க் காரம், மிளகாய்த் தூள் போன்ற பொருட்களும் தமக்கு தேவைப்படுவதாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அரசாங்க அதிபர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. வன்னிப் பகுதியில் வாழும் மக்களின் அதிகரித்து வரும் தேவைகளை நிறைவு செய்ய அரசாங்கமும் தொண்டர் அமைப்புக்களும் தொடர்ச்சியாக பல் வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. மக்களின் அடிப் படை மனிதாபிமான தேவைகள் உடனுக்கு உடன் பூர்த்தி செய்யப்படுவதன் மூலமே பாரிய மனித பேரவலங்கள் ஏற்படுவதில் இருந்து அவர்களை பாது காக்க முடியும்.

**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ்வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்திட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

## இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு உளவியல் ரீதியாக ஆலோசனைகளை வழங்கவேண்டிய தேவை இருக்கின்றது

### வன்னி வலய மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ப.அரியரட்ணம்

வன்னிக் கல்வி வலயங்களில் தற்போதையு போர்சூழ் நிலை காரணமாக கல்வி நடவடிக்கைகள் தளம்பல் நிலையில் காணப்படுகின்றன இந்த நிலைமைகளை சீர்செய்வதற்காக 16 ஆம் திகதி புதன்கிழமை வன்னியில் அனைத்து கல்வி வலய பணிப் பாளர்களும் யுனிசெப் அலு வலகத்தில் சந்தித்து கலந் துரையாடினர். இந்த சந்திப் புத் தொடர்பாக அறிந்து கொள்ள வன்னி மேலதிக மாகாணக் கல்விப் பணிப் பாளர் பசுபதி அரிய இரட்ணம் அவர்களைநேர் கண்டுள்ளோம் *பாடசா லை உப கரணங்களை வன்னிக்கு அனுப்புவது தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபரிடம் ஏதாவது வேண் டுகோள் விடுத்தீர்களா?*



வவுனியா UNICEF அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டவர்கள்

2008 ஆம் ஆண்டுக்கு வன்னிக்கு கொண்டு செல் வதாக 6 வாகனப் பொதிகள் இலவசப் பாடநூல்களும் 2 வாகனப் பொதிகள் இல வசச் சீருடையும் தேங்கி நிற்கின்றது. அதேபோல் 2009ஆம் ஆண்டுக்கு கொண்டு செல்வதற்காக 6 பொதிகள் இலவசப் பாடநூல்கள் வந்திருக்கின்றன. இது சம்பந்தமாகத் தான் அத்தியாவசிய ஆணையாளரோடு தொடர்பு கொண்டு வன்னிப் பகுதிக்கான இலவசப்பாட நூல்களையும் சீருடைகளையும் பெறுவதற்கு முயற்சி மேற் கொண்டு வருவதாக கூறியிருந்தார்.

*வன் னிக் கல்வி வலயத்தில் பாட சாலை நடவடிக்கைகள் எவ் வாறு காணப்படுகின்றன?*

கடந்த வார இறுதிவரை கிளிநொச்சி வலயத்தில் இருந்து ஏறத் தாள 29 ஆயிரம் மாணவர்களுக்கு முல்லைத்தீவு வலயத்தில் இருந்து 2504 மாணவர்களுக்கும் துணுக்காய் வலயத்தில் இருந்து 6997 மாணவர்களுக்கு மடு வலயத்தில் இருந்து 7ஆயிரத்து 840 மாண வர்களுக்கும் வவுனியா வடக்கு வலயத்தில் இருந்து 5122 மாணவர்களுக்கு இடம் பெயர்ந்து வதிக்கின்றார்கள் அவர்கள் துங் கியிருந்து படிப்பதற்கு உடனடியாக தற்காலிக கொட்டில்கள் தேவை அவற்றை அமைப்பதற்கு இங்கிருந்து எவ் வித உபகரணங் களையும் கொண்டு செல்ல முடியாத நிலையில் நிறுவனங் களிடம் இருந்து நிதியுதவியை எதிர் பார்த்தோம்.

இவ்வாறான நிதியுதவியை அவர்கள் வழங்கினால் அந்தப்பகுதிகளில் இருக்கின்ற காட்டு மரங்களில் தடிகளையும் , ஓலை களையும் பாவித்து கொட்டில்களை அமைப் பதற்கான உதவிகளை நாங்கள் கோரியி ருந்தோம்.

**ஆசிரியர் மற்றும் மாணவர்களுக் கிடையிலான குடிநீர் சேமிப்பு வசதிகள் வன்னியில் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா?**

இடம்பெயர்ந்த மாணவர்கள் ஏனைய பாடசாலைகளுடன் சேர்ந்து படிக்கின்ற ஒழுங்கு முறை உள்ளது. அதேபோல் பாட சாலை தவிர்ந்த இடங்களில் தற்காலிக கொட் டில்களை அமைத்து பாடசாலைகள் நடை பெறுகின்ற இடங்களும் உள்ளன. அவ்வா றான இடங்களில் மிகவும் முக்கியமாக தேவைப்படும் குடிநீர் தான்.

ஆகவே குடி நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான கொள் கலன்களை அவர்களிடம் கேட்டிருக்கின்றோம். அவற்றையும் அவர்கள் விரைவில் தருவதாக ஒழுங்குகளை அவர்களிடம் கேட்டிருக்கின்றோம். அவற்றை அவர்கள் விரைவில் தருவதாக உறுதியளித்துள்ளார்கள்.

**மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குரிய மன நிலையில் இருக்கின்றார்களா?**

இடம்பெயர்ந்துள்ள மாணவர்களிற்கு உளவியல் ரீதியான ஆலோசனை களை வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது. அவ்வாறான ஆலோச னைகளை வழங்கு வதற்கு ஏற்கனவே உயிரியல் துறையில் பயிற்சி பெற்ற ஆட்கள் இருக்கின்றார்கள் ஆனால் அவர்கள் பல்வேறு பகுதிகளிலும் சென்று இந்த பயிற்சிகளை வழங்குவதற்கு நிதி யுதவி தேவையாக இருக்கின்றது. அதற்கு அந்த நிதியுதவியை நாங்கள் அவரிடம் கேட்டிருக்கின்றோம்.

**இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கழிவறை வசதிகளை பாடசாலைகளில் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றதா?**

மலசலகூடங்களும் அவசிய மாகத் தேவையாகவுள்ளது. சீமெந்து கல் போன்றவற்றை பெறமுடியாத காரணத்தினால் தற்காலிகமாக ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று மலசலகூடங்களை அமைப்பதற்கான தேவைப் பட்டியல்களை தான் நாங்கள் அவர்களிடம் கொடுத்திருக்கிறோம்.

**மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமைகளில் காலை 6 மணி முதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M.102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணிமுதல் 2மணிவரையும் புத்தளப் பிரதேசத்தின் அநுரா எவ்.எம்.ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45முதல் 7.15 மணிவரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www. radio. voices ofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.**

## கொட்டும் மழையிலும் தொடரும் துயரம்

தொடர்ச்சியான இடப் பெயர்வுகளால் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வரும் வன்னிப் பிரதேச மக்கள் தற்போது இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய துரதிஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மரநிழல்களிலும் சிறு சிறு கூடாரங்களிலும் தமது இடம் பெயர்வாழ்வை தொடரும் இந்த மக்கள் தற்போது ஆரம்பித்துள்ள மழையினால் மிகவும் அசௌகரியங்களை அனுபவிக்க நேரிடுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அறிக்கைகளின் பிரகாரம் வன்னியில் இடம் பெயர்ந்துள்ள சுமார் 2இலட்சத்து 20ஆயிரம் பேருக்கு தங்குவதற்கான கூடாரங்கள் தேவைப்படுவதாக தெரியவருகின்றது. மேலும் முல்லைத் தீவில் இடம் பெயர்ந்து வாழும் குடும்பங்களுக்கு தங்குமிடங்களை அமைப்பது குறித்து அக்கறை காட்டவேண்டிய நிலை உருவாகியிருப்பதாக இம் மாதம் 13 ஆம் திகதி வெளியான IASC அறிக்கையும் சுட்டிக்காட்டுகின்றது.

ஒரு சில குடும்பங்கள் மட்டுமே தமக்கான வதிவிடங்களை அமைப் பதற்கு தேவையான கூடாரங்களை இடம் பெயரும் போது எடுத்துச் சென்றுள்ளனர் இந்நிலையில் அங்கு மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வந்த ஐக்கிய நாடுகள் அமைப்பும் ஏனைய சர்வதேச மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களும் அரசின் வேண்டுகோளுக்கமைவாக செப்ரெம்பர் மாதம் வன்னிப்பகுதியை விட்டு வெளியேறியுள்ளன. மனிதாபிமான அமைப் புக்கள் வன்னியில் இருந்து வெளியேறும் காலப்பகுதியில் 2100 தற்காலிக தங்குமிடங்கள் மாத் திரமே இடம் பெயர்ந்த மக்களுக்கு அமைத்துக்கொடுக்கப் பட்டிருந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

அண்மைக்கால அசம்பாவிதங்கள் காரணமாக முல்லைத்தீவில் 39ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 1இலட்சத்து 55 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்த நிலையில் தங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.



முல்லைத்தீவில் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் குறித்துIRIN இணையத் தளத்திற்கு கருத்துத் வெளியிட்ட முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எமில்டா சுகுமாரன் இடம் பெயர்ந்த மக்களில் அரைவாசிக் கும்அதிகமானவர்களுக்கு தற்காலிக வதிவிடங்கள் தேவவைப்படுவதாகத் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்துள்ள 14ஆயிரம் குடும்பங்களுக்கு தற்காலிகக் கொட்டில்கள் தேவைப்படுவதாகவும் அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை விவகாரங்கள் தொடர் பில் குரல் தர வல்ல அதிகாரியான கோட ன் வெயிஸ் IRINஇணையத்துக்கு கருத்து தெரிவிக்கையில் தற்போது வன்னிக்கு உணவு விநியோகத்தை மட்டுமே தாங்கள் மேற்கொண்டு வருவதாகவும் எதிர்காலத்தில் தற்காலிக கூடாரங்களை அமைப்பதற்கு தேவையான பொருட்களை கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படலாம் என்றும் கூறினார். அண்மையில் ஏற்பட்ட மோதல் சூழ் நிலைகள் காரணமாக பெரும்பாலான கிளிநொச்சி மக்கள் முல்லைத்தீவை நோக்கி இடம் பெயர்ந்துள்ள போதிலும் சுமார் 66 ஆயிரம் குடும்பங்கள் வரையில் கிளி நொச்சி மாவட்டத்துக்குள்ளேயே முல்லைத் தீவுக்கு மேற்காக இடம் பெயர் ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இடம் பெயர்ந்து செல்லும் மக்கள் சிலர் தாழ் நிலப்பகுதிகளில் தங்கியுள்ளனர். மழைகாலங்களில் அப்பகுதிகள் நீர் நிரம்பக்கூடிய அபாயங்களுக்கு உள்ளாகும் போது இம் மக்களின் நிலை கவலைக்கிடமாகும் என மனிதாபி மான அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஏ 35 பாதையை அண்டிய பகுதியிலும் இம்மக்கள் தங்கியிருப்பதாக தெரிய வருகின்றது. அப்பகுதி ஏற் கனவே இடம் பெயர் மக்களை குடியமர்த்துவதற்காக வீடுகளை அமைக்கும் அமைப்புகளால் பரிசீலிக்கப்பட்டுதாழ்நிலப்பகுதியாக இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை அண்மை நாட்களில் பாம்புகளால் தீண்டப்பட்டு மருத்துவ சிகிச்சைக்காக சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கிளிநொச்சி மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் பாம்புகள் மற்றும் ஏனைய ஆபத்தான உயிரினங்களின் நடமாற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும் மக்கள் பாதுகாப்பற்ற இடங்களில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த விலங்குகளினால் ஏற்படும் தாக்கங்கள் அதிகரித்துள்ளதாகவும் தெரிய வந்து உள்ளது.

வன்னிப்பகுதி மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்க சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் மாத்திரம் வன் னியில் நிலைபெற்று நிற்கிறது.

இம்மக்களுக்கான உணவுப் பொருட்களின் விநியோகமும் உகந்த முறையில் முன்னெடுக்கப்படும் போது தான் பிரச்சினைகளை மட்டுமே வாழ்கையாகக் கொண்டுள்ள மக்களுக்கு ஓர் அள வேனும் ஆறுதலாக இருக்கும்.

# நேர்மை இல்லாதவர் டெண்டுல்கர்; மன்னிப்பு கேட்டார் கில்கிறிஸ்ட்



(புதுடில்லி)

நேர்மை இல்லாதவர் என விமர்சித்த விவகாரத்தில் சச்சினிடம் மன்னிப்பு கேட்டுள்ளார் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் அடம் கில்கிறிஸ்ட். தனது கருத்துக்களை ஊடகங்களில் திரித்துக் கூறப்பட்டுள்ளதாக அதிரடியாக தெரிவித்துள்ளார்.

இந்தியா அவுஸ்திரேலியா அணிகள் மோதிய சர்ச்சைக்குரிய சிட்னி டெஸ்ட் போட்டி இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடந்தது. இப்போட்டியின் போது இந்திய வீரர் ஹர்பஜன், சைமண்ட் பார்த்து குரங்கு எனக் கூறியாதாக புகார் எழுந்தது.பின்னர் ஹர்பஜன் ஒரு வழியாக தடையில் இருந்து தப்பினார்.இப் பிரச்சினையில் இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நேர்மையில்லாமல் நடந்து கொண்டதாக கில்கிறிஸ்ட் புகார் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ட்ரூ கலர்ஸ் என பெயரிட்டுள்ள தனது சுய சரிதையில் இவர் கூறியிருப்பதாவது. முதலில் நடந்த விசாரணையின் போது ஹர்பஜன் சொன்ன வார்த்தை தனக்கு சரியாக கேட்கவில்லை என சச்சின் தெரிவித்தார்.பின்னர் மேன்முறையீட்டின் போது ஹர்பஜன் ஹிந்தி மொழியில் சொன்ன வார்த்தையை தான் குரங்கு என அவுஸ்திரேலிய வீரர்கள் குறிப்பிடுவதாக மாற்றிச் சொன்னார். இந்த பிரச்சினை காரணமாக டெஸ்ட் தொடரை புறக்கணிக்கப் போவதாக இந்தியா மிரட்டியது ஏற்றுக் கொள்ள முடியாதது. போட்டி முடிந்த பின்னர் சர்ச்சைகளை மறந்து எதிரணி வீரர்களுடன் கைகுலுக்கிக் கொள்வது அவுஸ்திரேலியாவின்வழக்கம் இதுபோன்று மற்ற அணி வீரர்கள் நடந்து கொள்வதில்லை. உதாரணமாக இந்திய அணியை வீழ்த்திய பின்னர் இரு அணி வீரர்களும் கை குலுக்கும் போது சச்சின் ஹர்பஜனை காண்பது மிகவும் அரிது இவ்வாறு கில்கிறிஸ்ட் குறிப்பிட்டுள்ளார்.

**வியாபாரயுத்தி**

சச்சின் பற்றி கில்கிறிஸ்ட் தெரிவித்த இந்த கருத்துக்கு முன்னாள் வீரர்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.தனது புத்தக விற்பனைக்காக செய்திருக்கும் வியாபார யுக்தி தான்இது என்கிறார் முன்னாள் இந்திய தேர்வுக் குழு தலைவர் வெங்சர்க்கார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் புத்தகம் விற்க வேண்டும் என்றால் விரைவில் உணர்ச்சிவசப்பட செய்யும் விடயங்களை பற்றி எழுதவேண்டும் என்பதை கில்கிறிஸ்ட் நன்றாக உணர்ந்திருக்கிறார். வியாபார தந்திரங்களை புரிந்து வைத்துள்ளார்.ஆனால் சச்சினின் நேர்மை குறித்து கேள்விஎழுப்பியிருப்பது துரதிருஷ்ட வசமானது என்றார்.



**மன்னிப்பு**

இதற்கிடையே நேற்று முன்தினம் சச்சினுடன் கில்கிறிஸ்ட் போனில் பேசியுள்ளார். அப்போது தனது தவறுக்கு மன்னிப்பு கேட்கும் விதத்தில் ஸாரி என கூறியுள்ளார். சிட்னி டெஸ்ட் சர்ச்சை பற்றி 12 பக்கங்கள் எழுதியுள்ளேன் இதில் இருந்து இரண்டு வரிகளை மட்டும் எடுத்து போட்டு ஊடகங்கள் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளன. புத்தகம் வெளியாவதற்கு முன்னதாக அதை ஆராய்வேன் என கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.இந்த சர்ச்சை குறித்து கருத்து எதுவும் தெரிவிக்க சச்சின் மறுத்து விட்டார்.

**ஹர்பஜன் ஆவேசம்**

சச்சின் விமர்சித்தது தொடர்பாக கில்கிறிஸ்டிற்கு ஹர்பஜன் காட்டமாக பதிலடி கொடுத்துள்ளார். இவர் கூறுகையில் கிரிக்கெற் தெரிந்தவர்களின் மரியாதைக் குரியவர் சச்சின்.அவர் பற்றி பேச கில்கிறிஸ்ட்டுக்கு தகுதி இல்லை. தற்போது முட்டாள்தனமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். சூழ்நிலைக்கு ஏற்ப மனதை மாற்றிக் கொள்வதில் கில்கிறிஸ்ட் கில்லாடி. உதாரணமாக ஆட்டமிழப்பு என்றால் விரைவாகவெளியேறி நல்லவர் போல் நடிப்பார்அதே நேரத்தில் அவுஸ்திரேலியாவுக்கு வெற்றிவாய்ப்பு இருந்தால் துடுப்பாட்ட பந்தை அடிக்காத போது கூட ஆட்டமிழப்பு கோரி தனது சுயரூபத்தை வெளிப்படுத்துவார். இவர் எங்களது மரியாதையை இழந்துவிட்டார். சிட்னி டெஸ்ட் போட்டியில் என்மீது எழுப்பப்பட்ட இனவெறி புகார்முடிந்துபோன விடயம் அது பற்றி பேசவிரும்பவில்லை என்றார்.(5)

# பாகிஸ்தானுடன் விளையாட ரூ.5மில்லியன் கேட்கும் மேற்கிந்திய தீவுகள்

மேற்கிந்திய தீவுகள்- பாகிஸ்தான் அணிகள் இடையே 2டெஸ்ட் கிரிக்கெற் போட்டி அபுதாபியில் நவம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. பாகிஸ்தானுடன் டெஸ்டில் விளையாட தங்களுக்கு ரூபா 5 மில்லியன் தரவேண்டும் என்று மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெற் சபை கேட்டுள்ளது. இமெயில் மூலம் இந்தத் தகவலை பாகிஸ்தான் கிரிக்கெற் சபையிடம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு பிரிச்சினை காரணமாக எந்த நாடும் பாகிஸ்தானில் விளையாட விரும்பவில்லை. இதனால் தான் பாகிஸ்தான் அபுதாபியில் மேற்கிந்தியத் தீவுகள் ஆடமுடிவு செய்திருந்தது. (5)

# பாக்.பயிற்சியாளர் லோசன் நீக்கம்



(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து ஜெப் லோசன் நீக்கப்பட்டுள்ளார்.கடந்த ஜுலை 2007 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஜெப்லோசன் பாகிஸ் தான் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப் பட்டார். பாகிஸ்தான் கிரிக்கெற் சபையுடன் (பி.சி.பி) அடிக்கடி முறைத்துக்கொண்ட இவர் நேற்றுமுன்தினம் அதிரடியாக நீக்கப்பட்டார். இதுகுறித்து பி.சி.பி உறுப்பினர் ஒருவர் கூறுகையில்,

லோசனின் பயிற்சிக்காலம் முடிய இன்னும் 6 மாதம் இருக்கிறது. ஆனால் பாகிஸ்தான் அணியின் விரைவான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அவரை பி.சி.பி, தலைவர் நீக்கியுள்ளார். அத்துடன் அவர் எதற்கும் உதவாதவர் எனத் தெரிவித்துள்ளார். இவரைத் தொடர்ந்து பி.சி.பி. தலைமை நிர்வாகி சப்கத் நக்மியும் நீக்கப்பட்டுள்ளார் என்றார். (5)

# உலக செஸ் தொடர்; சம்பியன் வாய்ப்பில் ஆனந்த்

## இன்னும் ஒருபுள்ளி தேவை




இந்திய கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் - ரஷிய கிராண் கிராண்ட்சிராம் னிக் மோதும் உலக செஸ் சம்பியன் போட்டி ஜெர்மனி யிலுள்ள பான் நகரில் நடை பெற்று வருகிறது.

12 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் யார் முதலில் 6.5 புள்ளிகளைப் பெறுகிறாரோ அவர் சம்பி யன் ஆவார். இதன் 8ஆவது சுற்று நேற்று முன்தினம் நடந்தது. இதில் அனந்த் கறுப்பு நிற காய் களுடன் விளையாடினார். 39ஆவது காய் நகர்த்தலுக்கு பின்னர் இந்த சுற்று சம நிலையில் முடிந்தது.

இந்த போட்டித் தொடரில் இது 5ஆவது சமநிலையாகும். மற்ற 3 சுற்றில் ஆனந்த் வென்றிருந்தார். 8 சுற்றுகள் முடிவில் ஆனந்த 5.5-2.5 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளார்.

உலக செஸ் சம்பியன் பட்டத்தை ஆனந்த் மீண்டும் கைப்பற்ற இன்னும் 1 புள்ளி தேவை. 9ஆவது சுற்றில் வென்றால் சம்பியன் பட்டம் பெறுவார். 3ஆவது முறையாக சென்னை வீரர் ஆனந்த் உலக சம்பியன் பட்டத்தை பெறுகிறார். 2000, 2007 ஆம் ஆண்டடில் அவர் உலக சம்பியன் பட்டத்தை கைப்பற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# பகைமை மறந்து ஹர்பஜனுக்கு மத்யூஹைடன் பாராட்டு



ஹர்பஜன் மிகச் சிறந்த பந்து வீச்சாளர் என அவுஸ்திரேலிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹைடன் பகைமை மறந்து பாராட்டியுள் ளார்.

இந்தாண்டு ஆரம்பத்தில் நடந்த இந்தியா அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் சர்ச்சைகளுக்கு பெயர் பெற்றதாக இருந்தது. அவுஸ்திரேலிய வீரர் ஹைடன்ஹர்பஜனை உப்புக்கு சப்பாணி என வெளிப்படையாக பேட்டியளித்து புதிய சர்ச்சை கிளப்பினார். இதையடுத்து இருவரும் மைதானத்துக்குள் அடிக்கடி முறைத்து கொண்டனர் தற்போது ஹைடன் பகைமை மறந்து ஹர்பஜனை பாராட்டியுள்ளார். இதுகுறித்து ஹைடன் அளித்த பேட்டியில் சிட்னிடெஸ்டில் நடந்தவற்றை அங்கேயே மறந்து விட்டோம். தற்போதைய தொடரில் ஹர்பஜன் சிறப்பாக பந்து வீசுகிறார். அவரது பந்து வீச்சைக் காண மகிழ்ச்சிஅளிக்கிறது. அணியின் எழுச்சிக்காக விளையாடுவதால் நட்சத்திர அந்தஸ்து பெற்றுள்ளார்.அவரை பாராட்டாமல் இருக்க முடியாது. இவ்வாறு ஹைடன் தெரிவித்தார். (5)

# இலங்கை அணியில் புதுமுக வீரராக மத்தியூஸ்




சிம்பாப்வே சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை அணியில் புதுமுக வீரராக அன்ஜலோ மத்தியூஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இலங்கை அணியின் உப தலைவர் குமார் சங்கக்கார மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோர் மீண் டும் அணிக்கு திரும்பியுள்ளனர்.எனினும் முன்னணி வீரர் களான சனத்ஜயசூரிய, சமிந்த வாஸ் ஆகியோர் தனிப்பட்ட காரணங்களுக்காக தொடரில் இருந்து விலகிக் கொண்ட தோடு டி.எம்.டில் சான் மற்றும் சாமரசில்வா ஆகியோர் நீக்கப் பட்டுள்ளனர்.

இதில் சனத்ஜெயசூரிய தென்னாபிரிக்க முதற்தரப்போட்டிகளில் விளையாடுவதற்காகவே இலங்கை அணியில் இருந்து விலகிக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவருக்கு பதில் உபுல் தரங்க மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே 21 வயதான சகல துறை ஆட்டக்காரர் அன்ஜலோ மத்தியூஸுக்கு இலங்கை ஒரு நாள் அணியில் விளையாட முதல் முறையாக வாய்ப்புக்கிடைத்துள்ளது. 19 வயதுக்கு கீழானோருக்கான இலங்கை அணியின் முன்னாள் தலைவரான மதிவ்ஸ் இலங்கை ஏ அணியின் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தில் சிறப்பாக செயற்பட்டதையடுத்தே இலங்கை அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

ஐந்து ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் விளையாடு வதற்காக இலங்கை அணி அடுத்த மாதம் 10ஆம் திகதி சிம்பாவே சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இதன் போது நவம்பர் 13ஆம் திகதி 3 நாள் போட்டியில் விளையாடும் இலங்கை அணி சிம்பாவே அணியுடன் நவம்பர் 21 , 23, 25, 28 மற்றும் 30ஆம் திகதிகளில் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடவுள்ளது.

இலங்கை அணி

மஹேல ஜெயவர்த்தனா (தலைவர்) குமார் சங்கக்கார, (வி.கா), உபுல் தரங்க , மஹேல உடவத்த, சாமர கபுகெதர, ஜெஹான் முபாரக், திலின கண்டம்பி , அன்ஜலோ மத்தியூஸ், பர்வீஸ் மஹ்ரூப், திலான் துஷார, தம்மிக்க பிரசாத், தில்ஹார பெர்னாண்டோ, நுவன் குலசேகர, முத் தையா முரளிதரன், அஜந்த மெண்டிஸ்.

# உக்கிரமடையும் வன்னிமக்களின்பேரவலம்; ஒருவாரத்தில் 40பேரை பாம்பு தீண்டியது மூவர் பலி

## யூ.என் வோட்ச்நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நிலை நாளுக்கு நாள் உக்கிர மடைந்து செல்வதாக ஐக்கிய நாடுகளின் யு.என். வோட்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது. யு.என். வோட்ச் நிறுவனத்தின் தலைவர் ஸோடொவெல்வ் தலைமையில் அண்மையில் வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த உண்மைகள் வெளிப் பட்டுள்ளன.

உலக உணவுத்திட்டம்ஜக்கிய நாடுகளுக் கான நிறுவர் நிதியம் ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் முகவர் நிலையம் உள்ளிட்ட பல நிறுவனங்களின் உறுப்பினர்கள் இந்த ஆய்வில் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவின் குடியிருப்பு மற்றும் கிளிநொச்சியில் தர்மபுரம் ஆகிய பகுதிகளில் அதிகளவான இடம்பெயர் மக்கள் தங்கியிருப்பதாக த் தெரிவிக்கப்படுகிறது. குறித்த பிரதேச மக்கள் குறிப்பாக பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. பாம்புக்கடி மற்றும் காய்ச்சலினால் பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டும் புதுக்குடியிருப்பு பகுதியில் சுமார் 40பேரை பாம்பு தீண்டியதாகவும் இதில் 3பேர் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த பிரதேசங்களில் 3772 பாடசாலை மாணவர்களும் 4076 மாணவிகளும் கல்வி நடவடிக்கைகளை தொடரமுடியாது அல்லலுறுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

புதுக்குடியிருப்பு மற்றும் தர்மபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அகதிகளுக்கு மருத்துவ சிகிச்சை களை வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் மிகவும் குறைந்தளவான வைத்தியர்களே பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மிகவும் பின்தங்கிய பிரதேசங்களுக்கான உணவு விநியோகத்தை ஐ.சீ.ஆர்.சீ மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது .

ஐ.சீ ஆர் சீ,கரிதாஸ் அமைப்பு,ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆகியன மட்டுமே தற்போது வன்னியில் மனிதாபிமான தொண்டுகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆரம்பத்தில் 3வேளை உணவை உட்கொண்டு வந்த மக்கள் தற்போது இரண்டு வேளை உணவை மட்டுமே உட்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் குறைந்தபட்ச ம் ஒரு லொறியிலேனும் உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும வாரம் ஒரு தடைவை வழமைபோல் உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது. (ஓ)

# ஜானக பெரேரா படுகொலை நடந்த இடத்தில் தடயங்களை அழிக்க அரசு முயற்சி

## இதனால் சந்தேகம் வலுப்பெறுவதாக ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜானக பெரேராவின் படுகொலை தொடர்பான விசாரணைகள் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மூன்று தினங்களுக்குள் குறித்த சம்பவம் இடம்பெற்ற இடம், அநுராதபுரம் மாநகர சபையினரால் கழுவி சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. தடயங்கள் கிடைக்கப் பெறாத வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இச் செயற்பாடு ஐக்கிய தேசியக் கட்சியின் சந்தேகத்தை மேலும் அதிகரித்துள்ளது என அக் கட்சியின் புத்தளம் மாவட்ட எம்.பி. பி. ஹரிஸன் தெரிவித்தார்.

முப்பது பேரின் படுகொலையை புலிகள் மீது சுமத்திவிட்டு தப்பிக்க முயற்சிக்கும் கூட்டமைப்பு அரசாங்கத்தின் விசாரணைகளில் நம்பிக்கை இல்லை எனவே சர்வதேச விசாரணைகளை ஐ.தே.க வலியுறுத்துகின்றது. அதன் மூலமே உண்மை வெளிப்படும் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஹரிஸன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறுகையில்,

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இந் நாட்டின் தேசிய சொத்தாக மதிக்கப்படவேண்டியவர். அவரது அர்ப்பணிப்பு அளப்பரியது. இதனை அரசாங்கம் உணர்ந்திருந்த போதிலும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டார் என்ற ஒரே காரணத்திற்காக அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய தகவல்கள் அல்லது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து ஆராயும் போது மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை அரசாங்கமே படுகொலை செய்திருக்கின்றது என்பது ஊர்ஜிதமாகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியை சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கில் ஜானக உள்ளிட்ட 30 பேர் பலியெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் 85க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மீதான தாக்குதல் குறித்து சில மணித்தியாலங்களில் குற்றவாளியையும் தடயங்களையும் அது தொடர்பான தகவல்களையும் கண்டு பிடித்த பொலிஸாருக்கு அப்படுகொலை தொடர்பில் இது வரையில் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை.

அரசாங்கம் கூறுவதைப் போல் புலிகளே இந்தப் படுகொலையைப் புரிந்திருந்தாலும் கூட வன்னியில் இருந்து அநுராதபுரத்திற்கு வந்திருக்க முடியாது. அரசாங்கத்தின் ஆதரவுடன் புலிகளில் இருந்துபிரிந்து செயற்படும் குழுக்களே இதனைச் செய்திருக்க வேண்டும். இதற்கு ஒத்துழைப்பை வழங்கிய அரசாங்கம் படுகொலை விசாரணைகளை இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைத்திருக்கின்றது. இரகசியப் பொலிஸாரிடம் விசாரணைகள் ஒப்படைக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் சம்பவ இடமான வடமத்திய மாகாண எதிர்க்கட்சி அலுவலக வளாகம் அநுராதபுரம் மாநகர சபையினரால் இரவு வேளையில் கழுவி சுத்தப் படுத்தப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பு சம்பவமொன்றில் ஒரு சிறு காகிதத்துண்டும் தடயப் பொருளாக பயன் படுகின்ற சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இவ் வாறிருக்கும் போது மேற்படி செயலானது ஐக்கிய தேசியக்கட்சியின் சந்தேகத்தை அதிகரித்திருக்கின்றது. அரசாங்கமே இந்தப் படுகொலைகளுக்கு காரணம் என்பதை நாம் அன்றே கூறிவிட்டோம். அது தற்போது உறுதியாகியிருக்கின்றது.

புலிகளின் மீது பழி சுமத்திவிட்டு தப்பிக்க நினைக்கின்ற அதேவேளை, தடயங்களையும் இல்லாது செய்யும் நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது. ஆகவே, சர்வதேச சுயாதீன விசாரணைகளை ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தி நிற்கின்றது என்றார். (ஓ)

## தீபாவளியை முன்னிட்ட விளையாட்டுவிழா

(காரைநகர்)

காரைநகர் கோவளம் விளையாட்டுக் கழகத்தின் தீபாவளியை முன்னிட்டு நடாத்தப்படும் விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோவளம் விளை யாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு விழாவின் பரிசளிப்பு விழா அன்றைய தினம் மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ளது. தலைவர் ந.சிவகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன், உடுவில் பிரதேச செயலர் அ. சோதிநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர் இ.எஸ்.பி. நாகரத்தினம், கிராம சேவையாளர். தி.சண்முகசுந்தரம் ,காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சுதாகரன், யாழ்ற்ரன் கல்லூரி ஆசிரியர் எஸ். இளங்கோ ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கலாநிதி தெ. சோமசுந்தர குருக்கள், வண பிதா யேசுதாஸ் அடிகளார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-246)


## தீவகம் தெற்கு வேலணை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்வி எமது சபையால் கோரப்படுகின்றது.

| இல | வேலை விபரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கப்படக்கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கப்படமாட்டது) |
|---|---|---|---|
| 01 | சாட்டியில் புதிய கிணறு அமைத்தல் | ரூபா. 9500.00 | ரூபா. 500.00 |
| 02 | தலைமை அலுவலக நூலக பாவுகை வேலை (சீலிங் வேலை) | ரூபா. 2600.00 | ரூபா. 500.00 |

ஆகிய வேலைகளுக்கு பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் (ICTAD திட்டம்) M-9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள ஒப்பந்தக் காரர்களும்,
2. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தில் (இ.தே.ஒ.ச) உறுப்பினராக உள்ளோர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் விண்ணப்பிக்கலாம்.

❖ கேள்விப் பத்திரப் படிவங்களை அலுவலக நேரத்தில் எமது தலை மையலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

❖ கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளில் ஒரு பிரதி உறையிலிடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு **செயலாளர், வேலணை பிரதேச சபை** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத் திலுள்ள கேள்விப் பெட்டியிலோ கீழே குறிப்பிட்ட நேர காலத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் மறுபிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

❖ கேள்விதாரர்களோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ கேள்விகளைத் திறக்கும் சமயம் சமூகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரப் படிவங்கள் வழங்கும் இறுதித் திகதி –30.10.2008
கேள்விப்பத்திரப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி –07.11.2008 பி.ப.12.30 மணி வரை
கேள்விப்பத்திரப் படிவங்கள் திறக்கப்படும் திகதி –07.11.2008 பி.ப 1.00 மணி

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலணை பிரதேச சபை,
வேலணை.

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்
செயலாளர்.

(C-1715)



யாழ். நகரில் வருட இறுதியை முன்னிட்டு என்றும் எங்கும் இல்லாத

அதிரடி சிறப்புக் கழிவு விற்பனை

இன்று முதல் ஆரம்பமாகின்றது

# ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

- அனைத்துப் புத்தகங்களுக்கும் பத்துவீதம் முதல் ஐம்பது வீதம் வரையான விசேட விலைக்கழிவு
- லெமெனேற் கவரிடப்பட்ட CR கொப்பி மற்றும் அப்பியாசக் கொப்பிகள் விசேட தள்ளுபடி விலையில்
- ஆய்வுகூட உபகரணங்களுக்கு விசேட காட்சியறை வசதி
- பிலிப்சாட் போட், மக்னெற்போட் , பின்போட் அனைத்தும் விசேட கழிவு விலையில்

மற்றும் அனைத்து பேப்பர் வகைகள், எழுது பொருட்கள் , பிளாஸ்ரிக் பைல்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், செஸ்போட், கரம்போட், அலுவலகப் பாவனைப்பொருட்கள், புறொஜெக்டர்கள், புறொஜெக்டர் ஸ்கிறீன்கள், கொம்பியூட்டர் இங் வகைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்

(C-1719)

# இந்திய மத்திய அரசிடமிருந்து கருணாநிதிக்கு கிடைத்த உறுதிமொழி என்ன?



40 எம்.பி.க்களும் ராஜினாமா செய்வோம் என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிபு ஈழத் தமிழர் பிரச்சினையில் அதிரடிமாற்றத்தை உருவாக்கியுள்ளது.


இரண்டு வாரங்களுக்குள் அங்கு போரை நிறுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கெடு இப்பிரச்சினைக்கு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது.

### அனைத்துக்கட்சி குழு கூட்டத்தில் என்ன நடந்தது?

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதலில் பேசினார் தமிழக முதலமைச்சர் பின்னர் மற்ற தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டார். அப்போது பாட்டாளி மக்கள் கட்சி சட்ட மன்றக் கட்சித் தலைவர் கோ.க.மணி இந்தப் பிரச்சினையில் நீங்கள் ஏதாவது முடிவை எடுத்து வைத்திருப்பீர்கள் வரைவு தீர் மானம் கூட தயார் பண்ணியிருப்பீர்கள் அதை இந்த அளவில் தாக்கல் செய்தால் அதற்கேற்ப நாம் கருத்துக்களைச் சொல்ல முடியும் என்று கூறினாராம்.

ஜி.கே. மணியின் இந்த வேண்டுகோள் உடனடியாக ஏற்கப்பட்டு முதல்வர் உரு வாக்கி வைத்திருந்த ஆறு தீர்மானங்கள் அந்தக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டன. அதில் இத் தீர்மானங்கள் தொடர்பாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வில்லை. என்றால் கழக நாடாளுமன்ற உறுப் பினர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று கூறியிருந்தார் முதல்வர்.

அதற்கு முதலில் மறுப்புத் தெரிவித்தவர். தா.பாண்டியன்தானாம். இது அனைத்துக் கட்சிக்கூட்டம் அதனால் கழக என்று இருப்பதை விட தமிழகம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று இருந்தால் நல்லது. என்று அவர் கூற அதைத்தொடர்ந்து அத்



தீர்மானம் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று மாற்றப்பட்டதாம்.

அத்துடன் எங்கள் நாடாளுமன்ற உறுப்பிணர்களும் ராஜிணாமா செய்வார்கள் என்று தா. பாண்டியன் ஜி.கே. மணி வரதராஜன் ஆகிய அனைவரும் அறிவித்துள்ளார்கள். அதில் கூட ஓரிடத்தில் பதவி விலக நேரிடலாம் என்ற தீர்மான வாசகத்தை பதவி விலக நேரிடும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டும் என்று தா. பாண்டியன் வலியுறுத்தி மாற்றவும் செய்தாராம்.

இப்படித் தீர்மானத்தின் மீது அடிக்கடி திருத்தங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார் பாண்டியன் அனைத்துத் திருத்தங்களையும் முடித்து விட்டு இறுதியில் பாண்டியன் தர்பாரி தீர்மானத்தை இறுதி செய்யலாமா? என்று முதல்வர் கேட்க அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் சிரிப்பலை!

தீர்மான விவகாரங்கள் இப்படியிருக்க அந்தக் கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் தலைவர் தங்கபாலு நீங்கள் சொன்னாலேயே எல்லாம் நடக்கும் அப்படிப்பட்ட மத்திய அரசு தான் இருக் கிறது. ஆகையால் நாற்பது எம்.பி.களும் இராஜினாமா செய்வதை விட உங்கள் தலைமையில் பிரதமரைச் சந்திப்போம் அன்னை சோனியாவை சந்திப்போம். ராஜீவ்– ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கூட தீர்மானம் போடுவோம் . எம்.பிக்கள் ராஜினாமா என்பது எங்கள் கட்சி மேலிடத் தலைமையுடன் கலந்து ஆலோ சிக்க வேண்டிய முடிபு.

இருந்தாலும் இது உணர்வு பூர்வமான பிரச்சினை! இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் சளைத்ததல்ல அவர்களுக்காக இந்திராகாந்தி எவ்வளவு உதவி செய்தார். என்பதை நாடறியும் அப்பிரச்சினைக்காக இந்த மண்ணில் எங்கள் இளம் தலைவர் ராஜீவ் காந்தியை இழந்தோம். அதனால் ஏற்பட்ட கசப்புணர்வை மறக்க முடிய வில்லை. என்ற ரீதியில் பேசினாராம்

திராவிடர் கழக தலைவரான வீரமணி கலைஞர் பல சங்கடங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. அவர் ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறார் சர்வதேசச் சட்டங்களை மதித்து நாம் செயல்பட வேண்டியுள்ளது. ஏனென்றால் இது இரு மாநிலங்களுக்குள் உள்ள பிரச்சினை அல்ல. இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினை. அந்த நாட்டு இராணுவத் தளபதி பொன்சேகா சிங்களர்கள் பெரும்பான்மையாக வுள்ள நாடு சிங்களருக்கே என்கிறார். இதையெல்லாம் மனதில் வைத்து 40 எம்.பி.க்கள் ராஜினாமா செய்யும் முடிவை கலைஞர் எடுத்துள்ளார் என்றாராம்.

திருமாவளவன் பேசும்போது என்னிடம் ஒரு சீ.டி வந்திருக்கிறது. அதைப் போட்டுப் பார்த்தேன். அதில் உள்ள சம்பவங்கள் மிகவும் கொடுமையாக இருக்கிறன்றன. தினமும் தமிழர்

**இவ்வார அரசியல்**

கள் குண்டு வீசிக் கொல்லப்படுகிறார்கள் என்று ஆவேசமாக உரையாற்றினாராம்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமாருக்கு இது முதல் அனைத்துக் கட்சிக் கூட்டம் அவர் பேசும் போது அனைவரும் ராஜினாமா செய்ய வேண்டும். என்று உரையை ஆரம்பிக்க குறுக்கிட்ட முதல்வர் நீங்கள் தான் அவசரப்பட்டு ராஜிணாமா செய்து விட்டீர்கள் எங்களையும் அவசரப் படச் சொல்கிறீர்களா? என்று கேட்டாராம்.

தா. பாண்டியன் போர்க் காலங்களில் பயன்படுத்தப்படக் கூடாத குண்டுகளை எல்லாம்கூட அப்பாவி மக்கள் மீது இலங்கை இராணுவம் பயன் படுத்துகிறது. என்று ஆவேசப்பட்டாராம். தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹைதர் அலி மத்திய அரசு தமிழர் பிரச்சினையில் பாரபட்சமாக இருக்கிறது. நம்மூரில் உள்ள 40 எம்.பிக்களும் பாராளுமன்றத்தை ஸ்தம்பிக்க வைக்க வேண்டும். அல்லது 123 ஒப்பந்தம் கையெழுத்தானதற்கு இடது சாரிகள் ஆதரவை வாபஸ் வாங்கியது போல் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடாத மத்திய அரசைக் கண்டித்து 40 எம்.பி.க்களும் ஆதரவை வாபஸ் வாங்க வேண்டும். இலங்கையில் மனித உயிர்கள் பறிபோகக் கூடாது என்று அறுதியிட்டுக் கூறினாராம்.

உழைப்பாளர் கட்சி செல்லமுத்து மத்திய அரசு வேறு நீங்கள் வேறு அல்ல! மத்திய அரசும் கலைஞர் அரசு என்றே மக்கள் கருதுகிறார்கள். கலைஞர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் சாம,தான, பேத, தண்டம் என்று சொல்வார்கள் அதில் இப்போது கலைஞர் தண்டத்தைக் கையிலெடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தாராம்.

இப்படியெல்லாம் பரபரப்பாக நடந்து முடிந்த கூட்டத்தின் இறுதியில் எம்.பி க்கள் ராஜினாமாவுடன் மனிதச் சங்கிலிப் போராட்டமும் நடத்தலாம் என்று ஒரு யோசனையை முதல்வர் தரப்பில் முன் வைத்திருக்கிறார்கள் ஆனால் மற்ற கட்சித் தலைவர்களோ எம்.பிக்கள் ராஜினாமா என்பதே அதிரடியான முடிவு ஆகவே மனிதச் சங்கிலிப் போராட்டம் தேவையில்லை என்று கருத்து கூற இறுதியில் அதே மாதிரி தீர்மானத்துடன் கூட்டம் முடிந்தது. இந்தக் கூட்டத்தில் இரு வாரம் மத்திய அரசுக்கு கெடு கொடுக்கப்பட்டுள்ளது. அதை, 48 மணி நேரம் என்று ஆக்க வேண்டும் என சரத் குமார் கூட்டத்திலேயே தெரிவித்துள்ளார். ஆனால் அனைத்துகு; கட்சியினரும் சேர்ந்து 2 வாரம் என்று கெடு விதித்துள்ளார்கள்.

இந்தக் கெடு இந்திய அரசுக்கு மட்டு மின்றி தமிழகக் கூட்டணிகளுக்குள்ளும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை இராணுவம் விடுதலைப்புலிகளின் கேந்திரமாக இருக்கும் கிளிநொச்சியை பிடிக்கும் வரை யுத்தம் தொடரும் என அறிவித்துள்ளதும். இன்னும் இரு வாரங்களில் அதைப் பிடித்துவிடுவோம் எனவும் தெரிவித்தார்.

சூழ்நிலையில் அங்குள்ள தமிழர்களை மீண்டும் சிறுபான்மை சமுதாயமாகவே இலங்கை , அரசு அடக்கி வைத்துவிட்டால் என்ன செய்வது? என்ற கவலையே இந்த கெடு விற்குள் அடங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இது ஒரு புறமிருக்க தமிழக அரசியலில் படு தீவிரத் தாக்கத்தை இந்தக் கெடு ஏற் படுத்தும். பிரச்சினை தீரவில்லை என்றால் தி. மு. க. எம். பிக்கள் முதலில் ராஜினாமா செய்து விடுவார்கள் . அடுத்த இடதுசாரிக் கட்சிகளின் எம். பி.க்களும் ராஜினாமா செய்வார்கள் ஆனால் இப்போது தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு மிகப் பெரிய தர்மசங்கடம் அமெரிக்க பொருளாதாரச் சீரழிவைத் தொடர்ந்து இந்தியப் பொருளாதாரத்தை சீரமைக்கும் முக்கியப் பணி ப.சிதம்பரத்திற்கு இருக்கிறது.

அப்படிப்பட்டவர் நிதியமைச்சர் பதவியை உதறித்தள்ள பிரதமர் ஒப்புக்கொள்வாரா என்பது மில்லியன் டொலர் கேள்வி தி.மு.க எம். பி. க்கள் ராஜினாமா செய்ய வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டு காங்கிரஸ் ஒத்துழைக்க மறுத்தால் அடுத்த தேர்தலில் இந்தக் கூட்டணி இருக்குமா என்ற கேள்வியும் எழும். இலங்கை தமிழர்களுக்கு ஆதரவான போராட்டத்தில் துணை



நிற்காத காங்கிரஸுடன் கூட்டணியா? என்ற எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்திற்கு பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தி.மு.க.வுக்கு வரும்.

எம்.பி. க்கள் ராஜினாமா முடிவில் அ.தி. மு.கவுக்கு பெரிய ரோல் இல்லை ஏனென்றால் அவர்களுக்கு லோக் சபாவில் எம்.பிக்கள் இல்லை ஆனால் வைகோவிற்கு இரு எம். பி. க்கள் இருக்கிறார்கள் அவர்கள் இரு வரும் ராஜினாமா செய்ய வேண்டிய நிர்பந்தம் உருவாக்கியுள்ளது. அதாவது தி.மு.க கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை. என்றாலும் அங்கு எடுக்கப்பட்ட முடிவை ஏற்கும் நிலை வைகோவிற்கு வந்து விட்டது.

அதனால் ராஜினாமா செய்வது எங்களுக்கு பெரிய விஷயமில்லை என்று அறிவித்தார். வைகோ ஆனால் தோழமைக் கட்சித் தலைவி ஜெயலலிதாவின் அறிக்கை வைகோவின் எண்ணவோட்டத்திற்கு எதிராக இருக்கிறது. இரு கட்சிகளின் உறவில் இந்த கருத்து வேறுபாடு ஓர் குழப்பத்தை உருவாக்கியுள்ளது. அதே சமயம் அ.தி.மு.கவும் எதையாவது செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது.

ஏனென்றால் இதுவரை இல்லாத அளவிற்கு இலங்கைப் பிரச்சினையில் ஒரு தெளிவான நிலையை அ.தி.மு.க. கடந்த வாரத் தில் எடுத்தது. இலங்கை தமிழர்களுக்கு மருந்து மற்றும் உணவுப் பொருள்களை வழங்கி உதவி செய்ய வேண்டும் . அங்கு அப்பாவிகள் மீது நடக்கும் தாக்குதலுக்காக இலங்கையை எச்சரிக்க வேண்டும் என்றெல்லாம் அறிவித்தார். ஜெயலலிதாவுக்கு அவர் வெளியிட்ட அறிக்கையே தமிழர்கள் இலங்கையில் தாக்கப்படுகிறார்கள் என்பதற்கு முக்கிய சான்றாக அமைந்தது.

அப்படிப்பட்டவர் இப்போது எம்.பி.க்கள் ராஜினாமா தீர்மானம் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கருணா நிதி செயல் படுகிறார் என்று அறிக்க்க கொடுத் துள்ளார். இதற்கு பின்னணி உண்டு!.

அ.தி.மு.க.விடம் இருப்பது இப்போது ஏழு ராஜ்யசபை. உறுப்பினர்கள் மட்டுமே ! அவர்களை ராஜினாமா செய்யச் சொல்லி ஜெயலலிதா அறிவித்தால் டில்லியில் அ.தி.மு.க. வுக்கு எதுவுமே இல்லை என்றாகிவிடும். ஆனால் தி.மு.க. சார்பில் கனிமொழி ராஜினாமா கடிதத்தை முதல்வரிடம் கொடுத்து விட்டார். தி.மு.க. ராஜ்யசபை எம்.பி.க்களும் ராஜினாமா செய்யும் நிலையில் அ.தி மு.க. அதை பாலோவ் பண்ண வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள் ராஜினாமா ஒரு விதம் ஆனால் எம்.எல். ஏ.க்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜ்யசபை எம்.பிக்கள் எல்லாம் ராஜினாமா செய்ய வேண்டும் என்றால் அ.தி.மு.க.விற்கு பிரச்சினை அது மட்டுமின்றி மீண்டும் ராஜ்ய சபை தேர்தல் நடந்தால் இப்போதுள்ள எம்.எல். ஏ.க்கள் எண்ணிக்கையின்படி அ.தி.மு.க. ம.தி.மு. கவுக்கும் ஒரு சீட்டை விட்டுக்கொடுத்தால் மட்டுமே இரு ராஜ்ய சபை எம்.பி.க்களைப் பெற முடியும்.

அதே சமயத்தில் இந்த ராஜ்ய சபை எம். பிக்களை தேர்ந்தெடுக்கும் எம்.எல். ஏக்களும் ராஜினாழா செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் மட்டுமே அ.தி.மு.க. பிரச்சினையின்றி தப்பிக்கும்.

அப்போது பாராளு மன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலும் வரும் வாய்ப்பு உருவாகும். அதை மனதில் வைத்தே மாநில ஆட்சியையும் கருணாநிதி துறக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்கிறார் ஜெயலலிதா.

விலைவாசி, உயர்வு மின்வெட்டு போன்ற பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு தமிழர் சென்டிமென்ட் முன்னுக்கு வந்தால் தமிழர்களுக்கு உதவாத காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைக்கலாமா? என்ற கேள்வி எழும் காங்கிரஸைத் தக்க வைக்கப் போராடிய தி.மு.க.வும் வரவேற்கத் தயாராக இருக்கும். அ.தி.மு.க தே.மு.தி.க பா.ம.க என்று அத்தனைக் கட்சிகளுக்குமே காங்கிரஸை தனித்துவிட வேண்டிய கட்டாயம் ஏற்படும் ஆபத்து இருக்கிறது.

**அமிர்தன்**

இது போன்றதொரு சந்தர்ப்பத்தில் காங்கிரஸைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இப்போது எம்.பிக்கள் ராஜினாமா முடிபு. விடுதலைப் புலிகளைக் காப்பாற்றும் முயற்சி அண்டை நாட்டில் போரை நிறுத்தச் சொல்லி இலங்கை உள் விவகாரத்தில் தலையிடலாமா? என்றெல்லாம் அறிக்கை விட்டுள்ளார் ஜெயலலிதா. ஆக. எம்.பிக்கள் ராஜினாமா என்பது தி.மு.க. மற்றும் அ.தி.மு.க கூட்டணிகளுக்குள் வெடிக்கப் போகும் குண்டு என்பதே இன்றைய நிலவரம்!

இப்படியொரு சிக்கலான முடிவினை மிகவும் தைரியமாக முதல்வர் எடுத்திருப்பதால் மத்திய அரசு தலையிடும். இலங்கையில் குறைந்தபட்சம் போர் நிறுத்தப்பட்டு அங்கே அமைதிப் பேச்சவார்த்தை தொடங்கும் என்று ஏதோ ஓர் விதத்தில் மத்திய அரசிடமிருந்து உறுதிமொழி கிடைத்திருக்கலாம் என்ற சூட்சுமம் கூட இந்த யுக்தியில் வெளிப்படுகிறது. எல்லாவற்றிற்கும் சில நாட்கள் பொறுத்திருப்போமே!

ஒருமித்து செயற்படுவதில் ஏற்படும் இன்பத்தைத் தனித்துச் செயற்பட்டால் அடைய முடியாது.

~ சுவாமி இராமதாசர்

வலம்புரி

# தமிழகத் திரைப்படத் துறைக்கு வரலாற்றுக் கடமை உண்டு

ஈழத் தமிழர்களுக்காக தமிழகத் திரையுலகம் குரல் கொடுப்பது மனநிறைவைத் தருவதாகும். தமிழகத்தில் அரசியல் புலத்திலும் மக்கள் எழுச்சியிலும் திரைப்படத்துறை கனதியான வகிபங்கை ஆற்றி வருவதானது மறுக்க முடியாத உண்மை.

இந் நிலையில் ஈழத் தமிழர்கள் படும் துயர் கண்டு தமிழகத்தின் திரைப்பட இயக்குநர்கள், நடிகர்கள் மற்றும் திரைப்படத்துறை சார்ந்தவர்கள் உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அவர்கள் மேற்கொள்ளவுள்ள இப் போராட்டம் தமிழக மக்களிடம் நேர்கணிய விளைவை ஏற்படுத்தும்.

அத்துடன் அரசியல்வாதிகளும் தமது நிலைப் பாட்டை மாற்றி ஈழத் தமிழர்களின் விடயத்தில் இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்னெடுப்பதற்கும் பெருந்துணையாக அமையும்.

எனவே தமிழகத்தின் திரைப்படத் துறையினர் தமது பணிகளையும் புறக்கணித்து விட்டு ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சியைக் காட்டி வருவது இலங்கை இனப்பிரச்சினையில் சமாதான விளைவுகளை ஏற்படுத்தும் என நம்பலாம்.

இதேநேரம் எங்கும் இருக்கக் கூடிய புறநடைப் பிரகிருதிகள் தமிழ்த் திரையுலகிலும் இல்லாமல் இல்லை. ஆம், நடிகர்களான அஜித், அர்ஜுன் ஆகியோர் ஈழத் தமிழர்களுக்காக ஏன் உண்ணாவிரதம் இருக்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மகாத்மா காந்தியாக வாழ்ந்து பெயரெடுக்க முடியாதவர்கள் கோட்சேயாக மாறி பெயரெடுக்க நினைக்கும் நியாயப்பாட்டில் இவ்விரு நடிகர்களும் அடங்குவர்.

பரவாயில்லை, சுப்பிரமணியசுவாமி தந்த – தந்து கொண்டிருக்கின்ற தொந்தரவை,மன வேதனையைத் தாங்கிக் கொண்டிருக்கும் எமக்கு அஜித்தினதும் அர்ஜுனதும் கருத்து கதிகலங்க வைக்காது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால் தமிழகத்தின் நடிகர்கள் அனைவரும் ஒருமித்து ஒத்த கருத்துடன் செயற்பட, இவ்விரு நடிகர்களும் எதிராக இருப்பது நெஞ்சை இறுக்கவே செய்கின்றது.

அதேநேரம் கவிஞர் வைரமுத்து, இயக்குநர் பாரதிராஜா, நடிகர் ரஜனிகாந் போன்ற திரையுலகின் சிரேஷ்டர்கள் ஈழத் தமிழர்களுக்காக கொடுக்கும் குரல் ஓசைக்கு முன்னால் மேற் குறித்த இரு நடிகர்களும் கதிரவனைக் கண்ட பனிபோல் ஆகிவிடுவர்.

அதேநேரம் அஜித்தும் அர்ஜுன் ஆகிய இரு நடிகர்களும் ஒரு உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது தமிழகத்தின் திரைப்படத்தை உலகெங்கும் எடுத்துச் சென்று தமிழகத் திரையுலகை வையகம் எங்கும் மேடையில் காட்சிப்படுத்திய பெருமை ஈழத் தமிழர்களுக்குரியது.

இந்த உண்மையை அவர்கள் மறந்து விடக்கூடாது. பல கோடி ரூபாய் செலவில் திரைப்படங்களைத் தயாரிக்கும் துணிச்சலையும் நம்பிக்கையையும் தமிழகத்தின் திரைப்படத் சகோதரர்களுக்கு ஏற்படுத்தியவர்கள் புலம்பெயர்ந்து லண்டன், கனடா, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களே என்ற உண்மை மறப்பதற்குரியதல்ல.

திரைப்படங்களோடு மட்டுமன்றி திரைப்படத்துறையினரையும் வெளிநாடுகளுக்கு அழைப்பதிலும் அவர்கள் அங்கு நடிப்பதற்கான கள நிலையை ஏற்படுத்துவதிலும் ஈழத் தமிழர்களின் பங்கு காத்திரமானது.

இவை யாவற்றுக்கும் மேலாக வெளிநாடுகளில் வாழும் இந்தியத்தமிழர்கள் வருமானத்தை உழைத்து தமது மண்ணுக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் போது ஈழத் தமிழர்கள் வெளி நாடுகளில் ஆலயம் அமைப்பதிலும்–தமிழர் பண்பாட்டை அங்கு அமுல் படுத்துவதிலும் காட்டும் தீவிரம் உலகெங்கும் தமிழ் பரவச் செய்யும் வழி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அந்த நினைவில் ஈழத் தமிழர்களுக்கான தமிழகத் திரையுலகின் எழுச்சி வரலாற்றுக் கடமையின் பாற்பட்டதாகும்.

# அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் பாரிய பித்தலாட்டமாக உள்ளது

## ஐ.தே.க. எம்.பி. தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி முதல் அனைத்துமே பொய்யானவை. இந்த அரசாங்கத்தின் வரவு– செலவுத்திட்டம் பாரிய பித்தலாட்டமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தயாசிறி ஜயசேகர எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

மக்கள் வங்கியும் தேசத்தின் வங்கியான இலங்கை வங்கியும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என அவர் மேலும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட பிரதேசிய சங்கவர்த்தனை வங்கிச் சட்டமூலம், இலங்கை கடன் தகவல் பணியக திருத்தச் சட்டமூலம் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய தயாசிறி ஜயசேகர எம்.பி. மேலும் கூறியதாவது,

மக்கள் வங்கியும், தேசிய வங்கியான இலங்கை வங்கியும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக நாட்டின் இரு தேசிய வங்கிகளும் தற்போது பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன.

மக்கள் வங்கியின் முகாமைத்துவ இயக்குநர்களின் மாதாந்த சம்பளத்துக்காக 55 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

இந்த இயக்குநர்களால் நலிவடைந்து செல்லும் மக்கள் வங்கியை சரிவிலிருந்து தூக்கி நிறுத்த முடியுமா? பொருளாதார நெருக்கடியை சரி செய்யவும், சரிவிலிருந்து பாதுகாக்கவும் மக்களின் ஓய்வூதியத்தில் கைவைக்க இலங்கை வங்கி முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சரிந்து செல்லும் தேசிய வங்கிகளின் நற்பெயரைப் பாதுகாக்க ஊழியர்களின் ஓய்வூதியத்தை பயன்படுத்த அரசாங்கம் முயன்று வருகின்றது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து பொய்யான புள்ளி விபர தரவுகள் மூலம் பூசி மெழுகுவதை அரசாங்கம் கொள்கையாகக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் மத்திய வங்கி முதல் அனைத்துமே பொய்யானவையாக இருக்கின்றன. அரசாங்கத்தின் வரவு–செலவுத் திட்டமோ பாரிய பித்தலாட்டமாகவுள்ளது என்றார். (ஓ)

# தமிழக மக்களின் எழுச்சியால் இந்திய மத்திய அரசு இலங்கை இனப்பிரச்சினை தீர்வு குறித்து தீவிர ஆலோசனை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கான முனைப்புகள், தமிழக மக்களின் எழுச்சி காரணமாக விரைவில் மேற் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து புது டில்லியின் மத்திய அரசாங்க நிர்வாகமும் தீவிரமாக ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக என்றும் இல்லாதவாறு ஆதரவு அலைகள் எழுந்துள்ளன். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து தமிழகத்தில் ஈழத் தமிழர்கள் தொடர்பாக கரிசனை குறைந்தே இருந்தது. எனினும் இன்று அந்த கரிசனை பாரியளவில் அதிகரித்துள்ளது. எனினும் இன்று அந்த கரிசனை பாரியளவில் அதிகரித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை கொலை செய்த சீக்கியர்களை மன்னித்து அவர்களில் ஒருவரான மன்மோகன் சிங்கிற்று பிரதம மந்திரி பதவியை வழங்கியுள்ள காங்கிரஸ் கட்சி ஏன் ராஜீவ் காந்தி கொலையிலும் இவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது? என்ற யதார்த்த கேள்விகள் இன்று தமிழகத்தில் எழுப்பட்டு வருகின்றன. முன்னர் தமிழக எதிர்க் கட்சிகள் மாத்திரமே இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுத்து வந்தன.

தற்போது இந்த போராட்டத்தை தமிழகத்தின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி முன்னெடுத்து செல்கின்றமை இலங்கை தமிழர்களுக்கான போராட்டத்தை வலுவூட்டியுள்ளது.

இதனை விட இதுவரை காலமும் இந்தியாவில் தடை செய்யப் பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் தற்போது தமிழகத்தில் ஆதரவு அலை பெருகியுள்ளது. இதில் முக்கியமாக தமிழக மக்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தை பெற்றுள்ள தமிழக திரையுலகத்தினர் இந்த ஆதரவை வெளிப்படுத்துகின்றமையானது இந்திய காங்கிரஸ் மத்திய அரசாங்கத்திற்கு பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் காங்கிரஸின் உயர் மட்டத்தினர், கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளனர்.

இலங்கை தமிழர் பிரச்சினையை இதுவரை காலமும் தமது அரசியலுக்காக பயன்படுத்தி வந்த இந்திய மத்திய அரசாங்கம், தமிழகத்தில் , கொந்தளிப்பு ஏற்பட்டால் அதனை சமாளிப்பதில் நிச்சயமாக நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என அச்சத்திற்கு உள்ளாகியுள்ளது. அத்துடன் தமிழகத்திலும் பிரிவினை கொள்கைகளுக்கு ஆதரவு ஏற்படலாம் என்ற அச்சமும் மத்திய அரசாங்கத் தரப்பில் ஏற்பட்டுள் ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் சிலை உடைப்பு, சென்னையில் உள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயம் தாக்கப்பட்டமை போன்ற வன்முறை சம்பவங்களும், வைகோபால சாமியின் பிரிவினைவாத கருத்துக்களும் தமிழகத்தின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. எனவே உடனடியாக இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் முனைப்புகளை இந்திய மத்திய அரசாங்கம் ராஜதந்திர மட்டத்தில் மேற்கொண்டு வருகிறது. (ஓ)

## புலமைப்பரிசில் பரீட்சையில் தேறிய சமுர்த்தி பயனாளி குடும்ப மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

இம் முறை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக பட்டச புள்ளிகளைப் பெற்ற சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரம் மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய மாதாந்தம் 2 ஆயிரத்து 400 ரூபாவை கொடுப் பனவாக வழங்க தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. சமுர்த்தி பயனாளிகளின் பிள்ளைகளுக்கு நகர பாடசாலைகளில் விடுதி வசதிகளை பெற்றுக் கொள்வதற்காகவே இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்த கொடுப்பனவை 10 மாதகாலத்திற்கு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதென அரசாங்க தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது. கல்வி கற்பதற்கான சமவுரிமையை வழங்கும் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இந்த புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அடுத்த வருடம் முதல் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கையை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஓ–6)

# அன்பே வாழ்வுக்கு வழி


அன்பு தான், வாழ்க்கை என்னும் வண்டியின் கடையாணி.அன்பு முறிந்து விட்டால் வாழ்க்கையும் முடிந்துவிடும் அன்பு கட்டளையினால் பிறக்காது ; கனிவினால் தான் உண்டாகும். கல்வனையும் கரைய வைப்பது அன்பே ; கடவுளுடன் இணைய வைப்பதும் அன்பே.

இந்த அன்பு இரண்டு வகைப்படும்: 1. இறையன்பு 2.பிறரன்பு இந்த இரண்டும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல, ஒரு மனிதனின் இரண்டு கண்கள் போல ; வண்டியின் இரு சக்கரங்களைப் போல ; பறவையின் இரண்டு இறக்கைகள் போல; படகின் இரண்டு துடுப்புகள் போல. ஒன்று குறைவு பட்டாலும் வாழ்க்கை ஓடம் தடுமாறி, தடம் புரண்டு விடும்.

## பரமபிதா காட்டிய பாதை

இவை இரண்டும் ஒன்றையொன்று பிணைந்து செல்ல வேண்டும். இந்த இரண்டு வகை அன்புக்கும் எல்லையே கிடையாது.

'இறையன்பும், பிறரன்பும் ஒரு ஆன்மாவின் வெளிப்புற, உட்புற இரண்டு பக்கங்களைப் போன்றன' என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறுகிறார். உட்புறம் சுத்தமாக இருந்து வெளிப்புறம் அசுத்தமாக இருந்தால் பார்ப்பதற்கு அவலட்சணமாய் இருக்கும். அதே போல வெளிப்புறம் அழகாக இருந்து உட்புறம் அழுக்காக இருந்தால் பழகுவதற்கு கசப்பாக இருக்கும். இரண்டு புறமும் அழகாகவும், தூயதாகவும் இருக்க வேண்டும். அதைப் போலவே இறையன்பும்,பிறரன்பும். 'உண்மையான இறையன்பு பிறர் சேவைக்கு வித்தாகும். ஆழமான பிறர் சேவை இறைப் பிரசன்னத்திற்கு வழிகோலும்.' இன்றைய நற்செய்தியிலும் இயேசு அன்பே முதன்மை என்றும், அது இறையன்பும் பிறரன்பும் ஒன்றாகக் கலந்தது என்றும் கூறுகிறார்.



நம்முடைய அன்பு எப்படிப்பட்டது? நாம் யாரை அன்பு செய்கிறோம்? எப்படி அன்பு செய்கிறோம்?

ஜோன் ரொபேர்ட்

# மத்திய அரசின் நடவடிக்கைகள் முழு மன நிறைவைத் தரவில்லை

## முதல்வர் கருணாநிதி கவலை



(சென்னை)

"நமது கோரிக்கையை ஏற்று மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும். இதுவே நமக்குப் போதுமான முழு மன நிறைவைத் தரக்கூடியது என்று எண்ண முடியவில்லை" என தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

முதல்வர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சிங்கள இராணுவம் பொழிகிற குண்டுகளால் தினம் தினம் அழிகிறது தமிழ் இனம். அந்த அழிவிலிருந்து நம் இனத்தை மீட்க நாமெல்லாம் ஒன்றுகூடி அரசின் உதவியை நாடி நிற்கிறோம்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இந்திய அரசு ஏற்று நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையோடு, உரியவர்களுக்கு அனுப்பி வைத்தோம். நம்பிக்கை வீண்போகவில்லை. என்னுடன் பிரதமர் பேசிய போது இலங்கை தமிழர் பிரச்சினைகளைத் தெரிவித்தேன்.

செய்தியாளர்களிடம் பிரதமர் மன்மோகன் சிங் "இலங்கையில் சமரச பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாண வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதும் சித்திரவதை செய்யப்படுவதும் வேதனை அளிக்கிறது" என்றார். வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி வெளியிட்ட அறிக்கையில், இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விளக்கினார். இதையெல்லாம் பார்க்கும்போது, அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றி நாம் அனுப்பிய தீர்மானங்களை எல்லாம் நன்றாகப் பரிசீலித்து அதை ஏற்கும் வகையில் மத்திய அரசு செயல்படும் என்ற நம்பிக்கை மேலும் கூடுகிறது.

பிரதமர் மன்மோகன்சிங்,கடந்த 18ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் நேரடியாகவே பேசியிருக்கிறார்.அப்பாவி மக்கள் தாக்கப்படுவதற்கு கவலை தெரிவித்தார். நிவாரணப் பொருட்கள் வழங்கவேண்டுமென கண்டிப்புடன் தெரிவித்தார்.

பிரணாப் முகர்ஜி இலங்கைக்கே செல்கிறார். பிரதமர் பேசியதன் விளைவாக இரண்டு இலட்சத்து 30ஆயிரம் பேருக்கு உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் தமது வேண்டுகோளை நிறைவேற்றும் வகையிலும், இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வில் அக்கறை காட்டுகிற வகையிலும் அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

ஆனாலும்,இதுவே நமக்குப் போதுமான முழு மன நிறைவைத்தரக் கூடிய விளைவாகும் என்று எண்ண முடியவில்லை. தரப்படும் உறுதிமொழிகள் தவறாமல் நிறைவேற்றப்படவும், இலங்கையில் தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்களாகவும், சிங்களவர்களுக்கு நிரந்தர அடிமைகளாகவும் இருக்க் வேண்டும் என்ற ஆதிக்க வெறியும், சிங்கள இன வெறியும் அறவே அகற்றப்பட வேண்டும்.

இலங்கையை ஆண்ட பரம்பரை தமிழர்கள் என்ற அந்தப் பெருமையுடன் தமிழ் இனத்திற்கான மதிப்பும் மரியாதையும் தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை வாழ் மக்களுக்குப் போதுமான சமத்துவ நிலையும் உருவாகி, அங்கே மனிதநேயம் மலருகிறது, இன ஒற்றுமை ஒளிருகிறது என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் ஏற்பட்டாக வேண்டும். இவ்வாறு முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். (5)

## அஜித் ,அர்ஜுன் கூற்றுக்கள் இணையத்தளம் ஒன்றின் புனை கதை

ஈழத்தமிழர்களுக்காக நாமேன் உண்ணா விரதம் இருக்க வேண்டுமென நடிகர்களான அஜித்தும் ,அர்ஜுனும் கேள்வி எழுப்பினர்கள். என இணயத்தளங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை எனவும் இணையத்தளம் ஒன்றினது தனிப்பட்ட விரோதத்திலான திட்டமிட்டுப் பரப்பப்பட்ட செய்தியெனவும் மறுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய விளக்கமான அறிக்கை ஒன்று நடிகர் சங்கத்தின் ஊடாக வெளிவர இருப்பதாகவும் அஜித் அர்ஜுன் இருவரும் நடிகர் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஈழத் தமிழர்களுக்கான உண்ணா விரதப் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கக்கப்பட்டுள்ளது. (ஓ)

## பாரதச் செய்திகள்

# இறந்த பின்பும் இதயமாகவும் கண்ணாகவும் இன்னொருவர் உடலில் வாழும் மனிதர்கள்

## தமிழ்நாட்டில் மக்களை நெகிழவைக்கும் சம்பவம்

விபத்தில் சிக்கி மூளைச்சாவு ஏற்பட்ட ராதாகிருஷ்ணன்என்பவரின்உடலில் இருந்து இதயம், கண், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப் புகளை தானம் கொடுக்க அவரது குழந்தைகள், மனைவி ஆகியோர் முன்வந்த நெகிழ் ச்சியான சம்பவம் சேலத்தில்நடந்தது. ராதாகிருஷ்ணனின் உறுப்புகளை தானம் செய்ய அவரது மனைவி,குழந்தைகள் சென்னைக்குஅம்புலன்சில்புறப்பட்டுச்சென்றனர். அவர்களை சேலம் மக்கள் பெருமை கலந்த சோகத்துடன் வழியனுப்பி வைத்தனர்.

சேலம் அருகே கருப்பூரை சேர்ந்த ராதாகிருஷ்ணன்(45), சேலம் கமலா மருத்துவமனையில் ஒப்பரேசன் தியேட்டர் உதவியாளராக 25 ஆண்டுகளாக பணிபுரிந்தார். அவருக்கு முதல் மனைவி சித்திரா மூலம் ரேவதி (17), பாரதி(16) என இருபெண்குழந்தைகள், முதல் மனைவி இறந்ததையடுத்து லதா(43) என்ற பெண்ணை திருமணம் செய்ததில் எழிலரசன்(11) என்ற மகன் உள்ளார் ஓக்டோபர் 22 அன்று இரவு 10 மணிக்கு சேலம் மருத்துவமனை யில் பணி முடித்துவிட்டு மொபெட் மூலம் கருப் பூரில் உள்ள வீட்டுக்கு புறப்பட்டார். அவர் கருப் பூர் மேம்பாலம் அருகே சென்றபோது அடை யாளம் தெரியாத வாகனம் மோதிவிட்டு சென் றுள்ளது.

ராதாகிருஷ்ணனுக்கு மூளையில் பலத்த காயமும் முகத்தின் எலும்பு உடைந்து காது. மூக்கு ஆகிவற்றில் ரத்தம் வெளியேறி கொண் டிருந்தது. ராதாகிருஷ்ணனிடம் இருந்த மொ பைல் போனை வைத்து, அவர் பணிபுரிந்த மருத்துவமனைக்கு தகவல் கொடுத்தனர். ராதாகிருஷ்ணன் 25 ஆண்டுகளாக பணி புரிந்த மருத்துவமனையிலேயே அவருக்கு சிகிச்சை தொடர்ந்தது. மருத்துவமனை நிர்வாக இயக்குநர் டாக்டர் ராஜகோபால்,டாக்டர் குருநாதன் ஆகியோர் சிகிச்சை அளித்தனர். தொடர்ந்து 36 மணி நேரம் சிகிச்சை அளித் துள்ளனர். எனினும் ராதாகிருஷ்ணன் நினை வற்ற நிலையிலேயே இருந்தார். நேற்று முன்தினம் காலை 10 மணிக்குமேல் ராதாகிருஷ்ணனின் இரத்த அழுத்தம் குறைந்து கொண்டேவந்தது. அவரது கண்விழி மிகவும் விரிந்து விட்டது. எந்தஉணர்வும்ராதாகிருஷ்ண னிடம் இல்லை. ராதாகிருஷ்ணனுக்கு மூளைச் சாவு ஏற்பட்டதை டாக்டர்கள் உறுதி செய்தனர்.

ஒரு மாதத்துக்கு முன்பு கல்பாக்கத்தை சேர்ந்த டாக்டர் தம்பதியரின் மகன் இதயேந் திரன் விபத்தில் காயமடைந்ததில்,அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டது. உடனடியாக அவரை சென்னை மருத்துவமனைக்கு கொண்டுசென்று இதயேந்திரனின்இதயம்கண்உள்ளிட்ட உறுப் புகள் தானமளிக்கப்பட்டன. தமிழகத்தை நெகிழ வைத்த அந்த சம்பவத்தின் சோகம் மக்கள் மனதை விட்டு இன்னும் நீங்கவில்லை இந்நிலையில், ராதாகிருஷ்ணனுக்குமூளைச்சாவுஏற்பட்டதை அவரது மனைவி, குழந்தைகளிடம் தெரிவித்த டாக்டர்கள் இதயேந்திரன் இன்னொருவரின் உடலில்இதய மாக உடலில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் தெரிவித்தனர். ராதாகிருஷ்ணனின் நிலையை அறிந்த குடும்பத்தினருக்கு வார்த்தைகளால்தாங்கமுடியாத சோகம் ஏற்பட்டு அழுதனர்.ராதாகிருஷ்ணனுக்கு மூளைச்சாவு ஏற்பட்டாலும் அவர் இதயமாகவும் , கண்ணாகவும் இன்னொருவரின் உடலில் வாழ வாய்ப்பு இருப்பதை அவரது குழந்தைகளும், மனைவியும் அறிந்தனர். தங்கள் சோகத்தை துறந்து ராதாகிருஷ்ணனின் இதயம், கண், கல்லீரல், கிட்னி உள்ளிட்ட உறுப்புகளை தானமாக கொடுக்க முன்வந்தனர் மருத்துவமனை டாக்டர்கள் உடனடியாக செயல்பட்டு சென்னை முகப்பேர் டாக்டர் செரியன் ஹார்ட் பவுண்டேசன் மருத்துவமனையை தொடர்புகொண்டு தகவல் தெரிவித்தனர். அவர்களும் உடனடியாக ராதாகிருஷ்ணனை சென்னைக்கு கொண்டு வரும் படி தெரிவித்தனர். மருத்துவ சிகிச்சை வசதிகள் கூடிய அம்புலன்சில் ராதாகிருஷ்ணனை அழைத்துக்கொண்டு மதியம் 3.30 மணிக்கு டாக்டர்கள் குழு சென்னை புறப்பட்டது. மற்றொரு அம்புலன்சில் ராதாகிருஷ்ணனின் மனைவி. குழந்தைகள்,உறவினர்களும் கண்ணீரோடு சென்னை புறப்பட்டனர். (5)

# ஜனநாயக ரீதியில் குரல் கொடுப்பதே நம் கடமை; தீவிரவாத ஒழிப்பில் பாரபட்சம் கூடாது

பிரிவினை மற்றும் தீவிரவாத ஆதரவு பேச்சுக்காக எடுக்கும் நடவடிக்கையில் பாரபட்சம் காட்டக்கூடாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரித்துள்ளது.



இதுகுறித்துஅக்கட்சியின் மாநில செயலாளர் என். வரதராஜன் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை,

இலங்கையில் தொடரும் ஆயுத மோதல் அங்குள்ள அப்பாவி தமிழ் மக்களை பாதித்துள்ள நிலையில், அங்கு அரசியல் தீர்வு காண உதவியாக போர் நிறுத்தம். மனிதாபி மான உதவி போன்ற கோரிக்கைகள் தமிழ கத்தில் எழுந்துள்ளன.

இந்த நிலையில் விடுதலைப்புலிகளை எதிர்ப்பவர்கள் தமிழ் துரோகிகள், தனித் தமிழ் ஈழமே தீர்வு, இலங்கைக்கு சென்று ஆயுதம் ஏந்திப் போராடுவோம், இந்தியாவில் தனித் தமிழ்நாடு கோரிக்கை எழும் என்று சில தலைவர்கள் முற்றிலும் தீங்கான கோஷங்களை எழுப்பி வருவது கடும் கண்டனத்துகுரியது. இது இலங்கை தமிழ் மக்களுக்கு எந்த விதத்திலும் நன்மை பயக்காது.

இந்திய அரசு இலங்கை அரசின் மீதான ராஜதந்திர ரீதியான நிர்ப்பந்தம் செலுத்துவதற்கு இது வலு சேர்க்காது. வைகோ, கண்ணப்பன் ஆகியோருக்கு எதிராக கிரிமினல் வழக்கு தொடர்ந்துள்ள தமிழக அரசு. அவர்களை சிறையில் அடைத்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள்பாரபட்சம் இல்லாமல் அமைய வேண்டும்.ஜனநாயக ரீதியில் குரல் கொடுப்பதே நம் கடமை. அதற்கு மாறான பாராதூரமான விளைவுகளை உள்ளடக்கிய விபரீத கோஷங் களை எழுப்புவது ஒரு சீர்குலைவு முயற்சி யாகவே அமையும்.இவ்வாறு வரதராஜன் கூறியுள்ளார். (ஓ)

# இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்று நேற்றல்ல சுதந்திரம் பெற்ற நாளிலிருந்தே தொடர்கின்றது

## -பா.ம.க.தலைவர் ஜி.கே.மணி



(சென்னை)

ஒவ்வொரு நாட்டிலும் விடுதலைப் போராட்டத்தை ஏதோவொரு குழு நடத்துவது வழக்கம் அந்த வகையில் இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தார்மீக முறையில் ஆதரிக்கின்றோம். என பா.ம.க தலைவர்ஜி. கே. மணி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து தமிழக மாணவர் சங்கம் சார்பில் பேரணி நடைபெற்றது. சென்னை மன்றோசிலை அருகே ஆரம்பித்த இப் பேரணிக்கு சங்க தலைவர் பாரிமோகன் தலைமை தாங்கினார்.

பா.ம.க தலைவர் ஜி.கே மணி இதை ஆரம்பித்து வைத்து அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது, இலங்கை தமிழர் பிரச்சினைஇன்று நேற்று தொடங்கியதல்ல இலங்கை சுதந்திரம் பெற்ற நாளில் இருந்தே தொடர்கிறது. இந்தியாவில் பல மொழி. பல மதம். பல இனம் இருந்தாலும் அனைவரும் சமமாக மதிக்கப்படுகிறார்கள். ஆனால் இலங்கை யில் தமிழர்கள் கீழ்த்தரமாக நடத்தப்படுகிறார்கள்.

இதை எதிர்த்து விடுதலைக்காக அவர்கள்போராடுகிறார்கள். எனவே தார்மீக முறையில் இந்தப் போராட்டத்தை ஆதரிக்கிறோம். ஒவ்வொரு நாட்டிலும் விடுதலைப் போராட்டத்தை ஒருகுழு நடத்தும் இலங்கை தமிழர்களை ஆதரிப்பதால் போராளிக்குழுக்களை ஆதரிப்பதாக அர்த்தம் அல்ல.

இலங்கை பிரச்சினையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அப்பாவி தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் கொலை செய்யப்படுவதைத் தடுக்க வேண்டும். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு செய்ய வேண்டும் இலங்கை தமிழர்களுக்கு உணவு, மருந்து போன்றவை தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகள் இலங்கை தமிழர்களுக்காகப் போராடினாலும் ராஜீவ்காந்தி கொலை அதிர்ச்சி அளிக்கக் கூடியது.

அந்தசம்பவம் தமிழ் நாட்டில்நடந்தது நமக்கு தலை குனிவைஏற்படுத்தி உள்ளது. இலங்கை தமிழர் பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்க வேண்டும். என்பது எல்லா தமிழர்களின் விருப்பம்.

தனிப்பட்ட முறையில் விடுத்லைப் புலிகளுடன் எங்களுக்கு எந்த வித தொடர்பும் இல்லை அவர்களை பார்த்ததும் இல்லை பேசியதும் கிடையாது.

இலங்கைதழிழர்கள்பிரச்சினையில் தற்போது மத்திய அரசு முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதை மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். தமிழக மீனவர்கள் பாதுகாப்புக்கும் உறுதிஅளித்துள்ளார்.இன்னும் வேகமாக மத்திய அரசு நடவடிக்கை எடுத்துஇலங்கை தமிழர்கள் பிரச்சினைக்குதீர்வு காண வேண்டும் என்றார். (ஓ)

# கிழக்கில் வாழும் தமிழ்-முஸ்லிம்கள் ஓரணியில் திரள முன்வர வேண்டும்

## விடுதலைப்புலிகள் அறிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஓரணியில் திரள முன்வர வேண்டும் என விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறையினர் நேற்றுச் சனிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தீவில் வசிக்கும் வேறு எந்த இனத்தவருக்கோ மதத்தினருக்கோ நீதியான உரிமையோ பாதுகாப்போ அளிக்கப்பட மாட்டாது என்பதைக் காலத்துக்குக் காலம் இத்தீவை மாறி மாறி ஆட்சி செய்யும் சிங்களத் தலைவர்கள் ஒருவரை ஒருவர் விஞ்சியவர்களாக - புதிய புதிய தமது அரசியல் சாஸ்திரங்களை ஏவி விட்டும் படைகளை ஏவி விட்டும் இன வன்முறைகளைத் தூண்டி விட்டும் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளைக் குழிதோண்டிப் புதைத்துத் தமது தாயக மண்ணிலேயே அடிமைப்பட்டவர்களாக இரத்த வெள்ளத்தில் தமிழ் மக்களை மிதக்க வைத்து தமது பேரினவாத சுய ரூபத்தைக் காட்டியவாறு உள்ளனர்.

இதன் ஓர் அங்கமாகவே கடந்த 15 மாதங்களாகத் தென் தமிழீழத்தை தமிழீழ விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து மீட்டு ஏதோ ஜனநாயகத்தைப் பெற்றுக் கொடுத்து விட்டதாக மாய விம்பத்தை ஏற்படுத்தி - இக் காலப்பகுதியில் தென்தமிழீழ மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட 350ற்கும் மேற்பட்ட படையினரின் உயிரிழப்புக்களையும் காயமடைந்த 400ற்கும் மேற்பட்ட படையினரின் இழப்புக்களையும் மூடி மறைத்து-ஒரு காலத்தில் விடுதலைப்புலிகளுக்காகப் போராடி தமது சுயநலத்துக்காக சிங்கள இனவாத அரசின் கால்களில் விழுந்த கருணா, பிள்ளையான் போன்றோரைத் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஒரு தேர்தலைத் திணித்து அரசியலுக்குள் இழுத்துக் கொண்டது.

இதற்குத் தற்போதைய ராஜபக்ஷ குடும்ப அரசியல் நிறுவனத்தில் மகிந்த ராஜபக்ஷ முதன்மைப் பாத்திரத்தை வகித்தவாறு தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுவதைப் போல அரசியல் நாடகம் ஒன்றை அரங்கேற்றிக் கொண்டுள்ளார்.

இதில் மகிந்த ராஜபக்ஷ தன்னை நீதியானவராகக் காட்டி உலகையும் மக்களையும் சோரம் போன அரசியல் தலைவர்களையும் ஏமாற்றிக் கொண்டு தொட்டிலை ஆட்டும் பணியைக் கையேற்றுள்ளார்.

தமிழ் மக்கள் ஒரு பகுதியில் கூட ஒன்று பட்டு விடக் கூடாது என்பதற்காக கருணா, பிள்ளையான், ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா போன்றோரைக் கூட தனது அரசியல் சூழ்ச்சியால் பிரித்து வெவ்வேறு தளத்தில் செயற்படுத்துவதற்கு பசில் ராஜபக்ஷவையும் நியமித்துள்ளார்.

இந்தப் பிரித்தாளும் சிங்களப் பேரினவாத அரசியல் சூழ்ச்சிப் பொறிக்குள் முஸ்லிம்களின் ஒரு சில அரசியல் தலைமைத்துவங்களும் வீழத் தவறவில்லை என்பதும் கண்கூடான உண்மையாகும்.

அன்றும் சரி இன்றும் சரி என்றும் சரி இராணுவ, அரச பேரினவாதிகளால் இலங்கைத் தீவில் வசிக்கும் எந்தவொரு சிறுபான்மை இனத்தினருக்கும் மானிடத்தினருக்கே உரித்தான நீதியான சுதந்திரமும் கௌரவமும் பாதுகாப்பும் அளிக்கப்பட மாட்டாது என்பதை அண்மையில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறிய கூற்றிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்.

இன்றைய வரலாற்றுப் புற நிலையில் ஈழத் தமிழரின் உரிமைக்காக உலகத் தமிழினமே சகல வேறுபாடுகளையும் மறந்து ஒன்று சேர்ந்து உரிமைக்காகக் குரல் எழுப்பும் இவ் வேளையில், தென்தமிழீழ வாழ் முஸ்லிம்-தமிழ் உறவுகளும் ஓரணியில் ஒன்று சேர்ந்து தமிழீழ விடுதலைப் போருக்குத் தோள் கொடுங்கள்.

கடந்த 75 நாள்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட படையணி வீரர்கள் வம்மியடிக்குளம், பள்ளமடு,கோயில்குளம், கஞ்சிக்குடிச்சாறுக்குளம், உடும்பன்குளம், வக்குமுட்டியாவ உட்பட மற்றும் சில இடங்களிலும் நடத்திய வீரம் செறிந்த அதிரடித் தாக்குதல்களிலும் பொறிவெடித் தாக்குதல்களிலும் அதனால் ஏற்படுத்தப்பட்ட விளைவுகள் காரணமாகவும் சிறப்பு அதிரடிப் படையினரின் நான்கு உயரதிகாரிகள் உட்பட 46 சிறப்பு அதிரடிப் படையினர் உட்பட 65ற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்று குவித்துள்ளதுடன் 98ற்கும் மேற்பட்ட படையினரின் அங்கங்களை சிதைத்து படுகாயப்படுத்தியும் உள்ளனர் என்றுள்ளது. (எ-5)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

இக் கலந்துரையாடலுக்கு அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (ச)

## சீமான் மற்றும் அமீர் சிறையில் அடைப்பு

(சென்னை)

'தமிழகத்தில் நேற்று முன்தினமிரவு கைது செய்யப்பட்ட இயக்குநர்கள் சீமான் மற்றும் அமீர் ஆகியோரைப் பொலிஸார் நேற்றுக் காலை சென்னையிலிருந்து 7.15 மணி விமானத்தில் மதுரைக்கு அழைத்துச் சென்றனர்.

காலை உணவினை இயக்குநர் சீமான் மற்றும் அமீர் ஆகியோர் பரமக்குடியிலுள்ள ஒரு விடுதியில் முடித்த பின்னர் இராமேஸ்வரம் நீதிமன்றத்துக்கு 11.30 மணியளவில் கொண்டு செல்லப்பட்டனர்.

நீதிமன்றத்துக்கு முன்பாக அனைத்துத் தமிழின உணர்வாளர்களும் பொதுமக்களும் திரண்டு நின்றனர். இயக்குநர் அமீர் மற்றும் சீமானை நவம்பர் 9 ஆம் திகதி வரை மதுரைச் சிறையில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச)

## 'சாவை ஏற்படுத்தும் பேய்' சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

மகாசோனா என்ற அமைப்பு கொழும்பிலுள்ள முன்னணி சட்டத்தரணிகளுக்கு மரண அச்சுறுத்தல் கடிதங்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஆஜராகும் எந்தவொரு சட்டத்தரணியும் மரணத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அந்த எச்சரிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாசோனா என்ற சிங்கள வார்த்தைக்கு சாவைக் கொண்டு வரும் பேய் என்ற அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பயங்கரவாத நடவடிக்கை சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குபவர்களாகவே இந்த அமைப்புக் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவ்வாறான கொலைக் கலாசாரம் ஒன்று தென்னிலங்கையில் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது சுமார் 3 ஆயிரம் மக்கள் காணாமல் போயினர்.

இந்தக் காலத்தில் பிளக்கெட்ஸ் என்ற பெயரில் இந்தக் கொலை அமைப்பு பெயரிட்டு வந்தது. இலங்கையில் இவ்வாறான குழுக்கள் செயற்படுவதும் அவை பல்வேறு கட்டங்களில் இரகசியமான முறையில் கொலைகளில் ஈடுபடும் நடவடிக்கைகளும் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

1971 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் இவ்வாறான குழுவொன்றின் நடவடிக்கையினால் சுமார் 15,ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டனர்.

நெதர்லாந்திலுள்ள வீடியோ செய்தியாளர் ஒருவரின் தகவலின்படி, 1980 ஆம் ஆண்டில் இலங்கை கொலை பூமி என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையில் இவ்வாறான இரகசியக் கொலைகள் இடம்பெற்றபோதும் தமிழீழ விடுதலைப்புலிகளோ அல்லது வட பகுதியில் இயங்கி வந்த அமைப்புகளோ இரகசியமான பெயர்களில் தமது எதிரிகள் மீது தாக்குதல் நடத்தவில்லை என ஆசிய மனித உரிமைகள் ஆணையகத்தின் பணிப்பாளர் பசில் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (எ-5)

## உலகத் தமிழர்களின் கொந்தளிப்பால் உண்ணாவிரதத்தில் பங்கேற்பதாக நடிகர் அஜித் இணக்கம் தெரிவிப்பு

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி சென்னையில் நடிகர் சங்கம் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் நாங்கள் ஏன் கலந்து கொள்ள வேண்டும் என நடிகர்களான அஜித், அர்ஜுன் நிர்வாகிகளிடம் கேட்டிருந்தனர்.

இச் செய்தி வெளியான சில மணி நேரங்களில் உலகத் தமிழர்கள் கொந்தளித்ததுடன் அஜித் நடித்த ஏகன் திரைப்பட இறுவெட்டைக் கொள்வனவு செய்த தமிழ்த் திரையரங்கு உரிமையாளர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் இந் நடிகர்களுக்கு எதிராகக் கண்டனப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு வழங்க மறுத்த நடிகர் அஜித் நடித்து வெளியாகும் ஏகன் திரைப்படத்தைத் திரையிட விடமாட்டோம் என்று கொந்தளித்த ஈழத் தமிழர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் சிலவற்றிலும் இறங்கினர்.

சில இடங்களில் கல்வீச்சு, போஸ்டர் கிழிப்புப் போன்ற சம்பவங்களும் நடந்துள்ளன. இதனால் திட்டமிட்டபடி ஒக்டோபர் 25 இல் பாரிஸ் நகரில் ஏகன் திரைப்படத்தை வெளியிட முடியாத சூழல் உண்டாகியுள்ளது.

இவ்வாறு உலகத் தமிழர் ஏகன் திரைப்படத்தைப் புறக்கணித்ததும் ஏகனை வெற்றிகரமாகத் திரையிட விரும்பிய, ஈழத் தமிழருக்கு ஆதரவு கொடுக்க மாட்டேன் என முழங்கிய அஜித் ஏதும் செய்ய முடியாத நிலையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்க முடிபெடுத்துள்ளார்.

நடிகர் சங்கம் எடுத்துள்ள உண்ணாவிர



தப் போராட்ட முடிபை நான் முழுமையாக ஆதரிக்கின்றேன். எனவே கட்டாயம் சென்னையில் நவம்பர் முதலாம் திகதி நடக்கும் உண்ணாவிரதப் போராட்டத்தில் நானும் கலந்து கொள்வேன்.

ஈழத்தில் அப்பாவித் தமிழர்கள் தாக்கப்படுவதற்கு என்னுடைய கண்டனத்தைத் தெரிவிப்பேன் என ஈழத் தமிழருக்கு எதிராகப் பேசிய நடிகர் அஜித் உறுதி கூறியுள்ளார்.(ச-5)

## ம.ம.மு. தலைவர் சந்திரசேகரன் இந்தியாவுக்குத் திடீர் பயணம்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மூத்த அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரன் நேற்று முன்தினம் இந்தியாவுக்குப் பயணமாகியுள்ளார்.

ஈழத் தமிழருக்கு ஆதரவாகத் தமிழகத்தில் இடம்பெறும் போராட்டங்கள் மற்றும் இந்திய நிலைப்பாடுகள் குறித்த விடயங்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காகவே அமைச்சர் சந்திரசேகரன் இந்தியாவுக்குச் செல்வதாக மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

முதலமைச்சர் கருணாநிதி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் செல்வி ஜெயலலிதா உட்பட தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் இந்திய மத்திய அரசின் தலையீட்டுக்கு ஆரோக்கியமான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று சந்திரசேகரன் கோரிக்கை விடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை அமைச்சர் சந்திரசேகரன் புதுடில்லிக்குச் சென்று வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி உட்பட மூத்த அமைச்சர்கள் பலரைச் சந்திப்பார் எனவும் மலையக மக்கள் முன்னணித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைவாகவே சந்திரசேகரன் இந்தியாவுக்குச் செல்வதாகக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## பஸ்களில் பயணிக்கும் பிற்பொக்கெட் திருடர்கள்

(யாழ்ப்பாணம்)

பயணிகள் பஸ்களில் பிற்பொக்கெட் அடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் அதிகமாகப் பயணிக்கும் பஸ்களிலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

பயணிகள் போன்று பிரயாணம் செய்யும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுவதாகவும் இதனால் பஸ்களில் பயணம் செய்பவர்கள் தமது உடைமைகளையிழக்கும் நிலை காணப்படுவதாகவும் கூறப்பட்டது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சேவையில் ஈடுபடும் பஸ்களில் அண்மைய நாள்களில் இவ்வாறான பிற்பொக்கெட் அடிக்கும் சம்பவம் அதிகரித்துள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நல்லூர் செட்டித்தெரு வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அத்துடன் திருநெல்வேலி அம்மன் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பெண் ஒருவரிடமிருந்து நேற்று மாலை 6.30 மணியளவில் திருடர்களினால் நகைகள் அபகரித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# சிறுபான்மைக் கட்சிகளை இணைத்து புதிய கூட்டமைப்பு விரைவில் உருவாகும்!

## ஹக்கீம் நடவடிக்கை

சிறுபான்மைக் கட்சிகளின் பெரும் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் தான் ஈடுபட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூக் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தான் இலங்கைத் தொழிலாளர் காங்கிஸ்,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, மேலக மக்கள் முன்னணி மற்றும் மலையக மக்கள்முன்னணி ஆகிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுபான்மையின மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயம், தேர்தல் சட்டங்களை ஒருதலைப்பட்சமாக மாற்றுவதற்கான முயற்சிகளை எதிர்த்தல் ஆகியவை உட்பட பல விடயங்களில் இந்தக் கூட்டணி சேர்ந்து செயற்படுவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் புதிய கூட்டமைப்பு அரசியல் தீர்வு சம்பந்தமான விடயத்திலும் அதேபோல.ஒருதலைப்பட்சமாக இந்த நாட்டின் தேர்தல் சட்ட நியமங்கள் மாற்றுகின்ற ஒரு முயற்சியையும் ஒருதலைப்பட்சமாக சட்டதிருத்தங்களை கொண்டுவந்து இலங்கையில்தொடர்ந்து ஆட்சியை நீடிக்கக் கூடிவகையில் மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ளும்.

இதேபோல அன்றாடம் கைதுகள், சுற்றிவளைப்புத் தேடுதல் என்பவற்றால் படுகின்ற இன்னல்கள், அவதிகள் அதேபோல வேண்டுமென்றே வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. எல்லா மட்டங்களிலும் இன்று நடந்து கொண்டு இருக்கின்றது. இதற்கான வெளிச்சம் போட்டுக் காட்டுகிற சம்பந்தமாக சர்வதே சமூகத்தின் கவனத்தை ஈர்க்கின்ற முயற்சிகளை நாங்கள் செய்தாகவேண்டியிருக்கின்றது.

இது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளோடு பேசியிருக்கின்றோம் என்றார். (ச-5)

## ஆடி ஊடு...

புலிகள் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட இரு உடலங்களும் விடுதலைப் புலிகளால் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (எ-5)

## கிளிநொச்சி...

அப்பகுதி இடிந்து சேதமாகியுள்ளது.

படையினரின் எறிகணைத் தாக்குதலால் மருத்துவமனையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள், பணியாளர்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

மருத்துவமனையின் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாக மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ச-5)

## ஜனாதிபதியின் ஆலோசகர்...

முடியாது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை நிலைவரம் குறித்தும் இலங்கையரசின் நிலை குறித்தும் எடுத்துரைக்கவும், இந்தியாவின் கவலைகளை தீர்ப்பது தொடர்பாக விவாதிக்கவும் பசில் ராஜபக்ஷ புதுடில்லி சென்றுள்ளார்.

புதுடில்லி சென்றுள்ள அவர் இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளியுறவுத் துறைச் செயலர் சிவசங்கர் மேனன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் உள்ளிட்டோரைச் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

இதேவேளை பசில் ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவுக்குச் செல்லும் உயர்மட்டக் குழுவினை மகிந்த ராஜபக்ஷ சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தியாவில் பேசப்பட வேண்டிய விடய்ங்கள் மற்றும் இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை எடுத்துக் கூறுவது குறித்து விரிவாக கலந்துரையாடியதாக தெரிவிக்கப் படுகின்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பில் மூத்த அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-5)

# ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி மறுப்பு

தற்பொழுது இலங்கையில் காணப்படும் நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விடுத்த கோரிக்கையை ஜே.வி.பி நிராகரித்துள்ளது.

பிந்திய நிலைவரங்கள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு வருமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இரண்டு தினங்களுக்கு முன்னர் ஜே.வி.பியினருக்குக்கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

இந்த அழைப்பை நிராகரித்து ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். இது தொடர்பான தீர்மானம் கட்சியின் அரசியல் குழுவால் கூடி எடுக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

என்னென்ன விடயங்கள் கலந்துரையாடப்படும் என அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நாடு தற்பொழுது பாரிய நிதிப்பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது என்பது பற்றி தமக்குத் தெரியும் எனவும் இதனால் மக்கள் அதிகரித்த வரிகளால் அல்லலுறுவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பாதிக்கப்படும் மக்கள் தொடர்பாக அரசாங்கம் குறைந்தளவில் கூடக் கவனம் செலுத்தவில்லை எனவும் ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன் இந்தியா தனது சொந்த நலனுக்காக இலங்கை விடயத்தில் தலையிடுவதாகவும் இலங்கையின் இனப்பிரச்சினையை பயன்படுத்தி பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் இலங்கையில் காலூன்றுவதற்கு இந்தியா முயற்சிப்பதாகவும் ஜே.வி.பியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## நேரடித் தலையீட்டை...

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு தமிழகத் தலைவர்களை சந்தித்து நாடு திரும்பிய தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அங்குள்ள நிலைமைகள் குறித்து வலம்புரிக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈழத்தமிழர் பிரச்சினையிலிருந்து வெகு தூரம் விலகியிருந்த இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஈழத்தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இந்தியா வந்துள்ளது.

இலங்கையில் அரச படைகளால் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது எனவும் பேச்சுவார்த்தைகள் ஊடான அரசியல் ரீதியான தீர்வே சாத்தியமாகும் என்பதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இவ்வாறு வலியுறுத்திவரும் இந்தியா தெற்காசியாவின் பாரிய நாடு என்பதால் இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியான உதவிகளையும் மேற்கொண்டு வருகிறது.

அதற்கு காரணம் அயல் நாடுகளான பாகிஸ்தானும் சீனாவும் இலங்கை அரசுக்கு போதியளவு ஆயுதங்களை வழங்கி இங்கு நிலை கொண்டுவிடும் என்பதை அறிந்தே.

ஆனால் இந்தியாவின் நிலைப்பாடு ஈழத் தமிழர்களுக்கு அரசியல் ரீதியான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டுமென்பதே. இந்தியாவின் இவ்வழுத்தத்தை இலங்கை பேரினவாத அரசு செவிசாய்க்கின்றதோ தெரிய வில்லை. ஆனால் இந்தியா தொடர்ந்து தமிழ் மக்களின் சகல தேவைகளை உறுதி செய்யக் கூடிய தீர்வை முன்வைக்கவேண்டுமென்பதை வலியுறுத்துவதாக அவர் குறிப்பிட்டார். (ச-5)

## வாழ்வாதாரம்...

என பான் கீ மூன் இலங்கை அரசாங்கத்தை கேட்டுள்ளார். அண்மையில் வன்னிக்குச் சென்று திரும்பிய ஐக்கிய நாடுகள் சபையின் ஒச்சா அமைப்பின் குழு ஒன்று வன்னியில், இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலருக்கு தெரியப்படுத்தியதை அடுத்தே இந்த வேண்டுகோள் இலங்கை அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கிளிநொச்சி முன்னரங்கில்...

மட்டுப்படுத்தப்பட்டளவு தாக்குதலில் ஈடுபட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

ஏ-32 வீதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது 583-வது படைப்பிரிவினர் தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாகவும் பல்லவராயன்கட்டுப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களில் விடுதலைப் புலிகளுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை வன்னி மோதல்களில் இராணுவத்தினருக்கு ஏற்படும் உண்மையான இழப்புக்கள் குறித்து கொழும்பு சரியான தகவல்களை வெளியிடுவதில்லை என விடுதலைப் புலிகளை மேற்கோள் காட்டி இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத்தினர் முன்னேறுவதற்கு எடுத்த முயற்சிகளை விடுதலைப் புலிகள் முறியடித்திருப்பதாக தெரிவிக்கும் அந்த இணையத்தளம் இந்த முறியடிப்புத் தாக்குதல்களில் பாதுகாப்பு தரப்புக்கு சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

இது இவ்விதம் இருக்க தற்பொழுது வன்னியில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இராணுவ நடவடிக்கைகள் மந்தகதியிலேயே முன்னெடுக்கப்படுவதாக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இலங்கை இனப்...

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக அழிக்கப்படும் வரை காத்திருக்காமல் அரசியல் தீர்வொன்றை ஏற்றுக்கொள்ளுமாறு அனைத்துக் கட்சிகளிடமும் அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் மேற்கண்டவாறு கூறியுள்ளார். விடுதலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்ட பின்னர் அல்லது ஆயுதங்கள் களையப்பட்ட பின்னர் அரசியல் தீர்வென்ற இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தீர்மானத்தையும் அவர் நிராகரித்தார்.

இராணுவ ரீதியில் தீர்வொன்றுக்குச் செல்வது மிக மிகக் கடினம். ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஊடாக அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும். கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சிங்களக் கட்சிகள்பொது இணக்கப்பாடொன்றுக்கு வரத் தவறியமை ஒரு துரதிர்ஷ்டமானது என அமெரிக்கத் தூதுவர் கூறினார்.

அரசியல் தீர்வொன்றை முன்வைக்க இலங்கை அரசாங்கம் தயார் எனின் விடுதலைப் புலிகளை மேலும் பலவீனப்படுத்தலாம். அரசியல் தீர்வானது மனித உரிமை நிலைமைகளை ஸ்திரப்படுத்த உதவுவதுடன் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கும் அது உதவியாக இருக்கும் எனவும் தனது உரையில் குறிப்பிட்ட அமெரிக்கத் தூதுவர் இலங்கையின் நிலைமையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு இந்தியாவும்,அமெரிக்காவும் முன் வரவேண்டுமெனவும் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)


தீபாவளி மலிவு விற்பனை

ஏகன் VCD Songs

ஏகன், சேவல், வாரணம் ஆயிரம்

போஸ்ரர்கள்

DVD { தமிழ் / ஆங்கிலம் / தமிழாக்கம் / ஹிந்தி

புதிய பழைய VCD / MP 3 என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்

FLASH CD HOUSE

NO.1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(1871)



தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

அதிரடி விலைக்கழிவுகளுடன் உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!

துரித தபால்கள் பொதிகள் சேவை

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

5% தொடக்கம் 20% வரையான விசேட கழிவு

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



வாடகைக்கு

யாழ்.போதனா வைத்தியசாலை, வேம்படி மகளிர் கல்லூரி சுற்றாடலில் உள்ள சகல வசதிகளையுமுடைய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. தாதிய மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 021 222 5032, 077 4372044

(C-1708)



இன்று முதல்

தீபாவளிக்கான விசேட பரிசு

இன்ரநெற் அழைப்புக்கள் மிககுறைந்த விலைகளில்

இந்தியாவிற்கான அழைப்பு 7/=

ஐக்கிய அரபு நாடுகளுக்கு 30/=

வெளிநாட்டுக்கான அழைப்பு 3/=

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.